Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ரா ம் கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT சீமேந்து ரா ம் கோ
(சி-1295)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆவணி 01 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஜ.ஆகிர் 19 (18.08.2003) திங்கட்கிழமை இதழ்: 318

## அவுஸ்திரேலிய பிரதி உயர்ஸ்தானிகர் யாழ்.விஜயம்!

அவுஸ்திரேலியாவின் பிரதி உயர்ஸ்தானிகர், எதிர்வரும் 20 ஆம திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளார்.

யாழ்.வரும் இவர், யாழ்.செயலகத்தில் அரச உயர் அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளதுடன், வேறு பல அதிகாரிகளையும் சந்தித்துப் பேசவுள்ளதாகத் தெரியவருகிறது.

## கொழும்பு சுற்றிவளைப்பில் 96 பேர் கைது!

கொழும்பில் நேற்றுக் காலை 6 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில், நடத்தப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதலின்போது, 96 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக, பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை- கடந்த 24 மணி

(10 ஆம் பக்கம் பார்க்க)

### சர்வதேச நிபுணர்களுடனான கலந்துரையாடலுக்காக

# தமிழ்ச்செல்வன் நாளை பாரிஸ் பயணமாகின்றார்!

தமிழீழ விடுதலைப் புலிகளால் அசாங்கத்துக்குக் கையளிக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்டவரைபு குறித்து, சட்ட நிபுணர்களுடன் ஆராய்வதற்காக, தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நாளை பாரிஸ் செல்லவுள்ளார்.

நாளை, கிளிநொச்சியிலிருந்து ஹெலிமூலம் கொழும்புக்குப் புறப்பட்டுச் செல்லும் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அங்கிருந்து உடனடியாக பாரிஸுக்குப் புறப்பட்டுச் செல்வார் எனத் தெரியவருகிறது. இவருடன் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவைச் சார்ந்த சிலரும் பாரிஸுக்குச் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தவாரம் பாரிஸில் ஆரம்பமாகும் இடைக்கால நிர்வாகசபை தொடர்பான கலந்துரையாடல்களில், சர்வதேச நிபுணர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களும் பங்கேற்கவுள்ளனர்.

சுமார் பத்து நாட்கள் வரை நீடிக்கும் இந்தக் கலந்துரையாடலில் முன்வைக்கப்படும் சிபார்சுகளை புலிகளின் தலைமைப்பீடம் ஆராய்ந்து அடுத்த மாத இறுதிக்குள் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.

பாரிஸில் நடைபெறவிருக்கும் இந்தக் கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கலந்துகொள்வாரா என்பது இதுவரை உறுதியாகவில்லை என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் உடல்நிலை - பிரயாணத்துக்கு ஏற்றதாக இருக்கின்றதென, வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்தால் மட்டுமே, அவர் பாரிஸ் கலந்துரையாடல்களில் பங்கேற்பார் எனவும் தெரியவருகிறது.

## இலங்கையர் நால்வர் தலைமறைவு

பிரிட்டிஷ் குடிவரவு தடுப்பு முகாமிலிருந்து, நேற்றுக் காலை நான்கு இலங்கையர்கள் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நான்கு பேரும், குடிவரவு மேன்முறையீட்டு விசாரணை முடியும் வரை, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள், சாதாரண சிவிலியன் உடையில் இருந்ததாகவும், ஆங்கிலம் பேசக்கூடியவர்களாக இருந்தனர் என்றும், பிரிட்டிஷ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அதிகாரிகள் பார்வையிடுவர்

தென்மராட்சி தெற்கில், விவசாய செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட பிரதேசத்தை, அரச அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் சென்று பார்வையிடவுள்ளனர்.

தென்மராட்சி தெற்கு, மறவன்புலோ வடக்கு ஆகிய பிரதேசங்களில் காலபோக நெற்செய்கை செய்வதற்கு, இராணுவத்தினர் அனுமதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



அத்துமீறுகிறவைய இவை தடுத்தா ஏன் இந்தப் பிரச்சினை...?

# நெடுந்தீவுக் கடலில் அத்துமீறிய 60 இந்திய மீனவர் தடுத்துவைப்பு!

## மீனவர்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்

(நெடுந்தீவு)

**இலங்கைக் கடற்பிரதேசத்தில், நேற்றுமுன்தினமிரவு அத்துமீறி மீன்பிடித்துக் கொண்டிருந்த அறுபது இந்திய மீனவர்கள், நெடுந்தீவு மீனவர்களால் பிடிக்கப்பட்டதோடு, அவர்கள் பயன்படுத்திய பதினைந்து இழுவைப் படகுகளும் கைப்பற்றப்பட்டன.**

பிடிக்கப்பட்ட மீனவர்களும் அவர்களது படகுகளும், தாளைத்துறைப் பகுதியில் நேற்று முன்தினமிரவு முதல் அதிகாலை வரை கடற்தொழிலாளர் சங்கத்தினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி படகுகளையும், மீனவர்களையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு பொலிஸார் கோரியபோதும், தமது பாதுகாப்பில் வைத்தே இவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கூறி, இவர்களை ஒப்படைக்க கடற்தொழிலாளர் சங்கத்தினர் மறுத்துவிட்டனர். அதன் பின்னர் நடந்த பேச்சுவார்த்தையை அடுத்து, படகுகளுடன் மீனவர்களும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்று - பொலிஸார் படகுகளையும், மீனவர்களையும் காரைநகர் கடற்படைத் தளத்திற்குக் கொண்டு செல்ல முற்பட்டபோது - அதனை எதிர்த்த கடற்தொழிலாளர் சங்கத்தினர், பிடிக்கப்பட்டுள்ள படகுகளின் உரிமையாளர்களுக்கு நிலைமைகளை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர்களை தடுத்துவைப்பது சட்டத்துக்கு முரணான செயல்!

### பொலிஸ் மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா

"அத்துமீறி, இலங்கைக் கடலில் தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்களை, இலங்கை மீனவர்கள் பிடித்து தடுத்து வைப்பது சட்டத்துக்கு முரணானது. இவ்வாறு பிடிக்கப்படும் மீனவர்களும் அவர்களது உபகரணங்களும் உடனடியாக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கத் தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்."

இவ்வாறு பொலிஸ்மா அதிபர் ரி.ஆனந்தராஜா தெரிவித்திருப்பதாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

வடமராட்சிக் கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்தபோதே, அவர் இந்த அறிவித்தலை விடுத்தார்.

நேற்றுக்காலை 10 மணிக்கு பருத்தித்துறை பொலிஸ்நிலையத்தின் விடுதியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

கடந்த 6 ஆம் திகதி, அத்துமீறி கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள், இன்பருட்டி கடற்தொழிலாளர்களால் கடலில் மடக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 20 அகதிகள் நெடுந்தீவு வந்தனர்!

தமிழக அகதிமுகாம்களில் தங்கியிருந்த 22 இலங்கை அகதிகள் நேற்றுக்காலை 6 மணியளவில், இந்திய சிறு மீன்பிடிப் படகுமூலம் நெடுந்தீவு மேற்கு பெரியதுறைப் பகுதியை வந்தடைந்தனர்.

வந்திறங்கிய அகதிகள், நெடுந்தீவுப் பொலிஸ் நிலையத்தில் வைத்து சோதனை செய்யப்பட்டதுடன், அவர்களிடமிருந்து தனித்தனி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்துத் தூதுவர் மீள வன்னி செல்வார்!

(கொழும்பு)

இலங்கைக்கான தாய்லாந்துத் தூதுவர் ஜேமரின் ஜனூன் மீண்டும் கிளிநொச்சிக்குச் சென்று அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

நேற்றுமுன்தினம் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துவிட்டு கொழும்பு திரும்பிய தாய்லாந்துத் தூதுவர் உடனடியாக நாடு திரும்பியுள்ளார்.

இலங்கையில் மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுத் திட்டங்கள் தொடர்பாக, தாம் மேற்கொள்ளவேண்டிய விடயங்கள் குறித்து தாய்லாந்துப் பிரதமருடன் தூதுவர் ஜனூன் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

பாரிஸ் செல்லவுள்ள தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக்குழுவினர், கிளிநொச்சி திரும்பியதும், தாய்லாந்துத் தூதுவர் அங்கு சென்று - அவருடன் பேச்சுக்களை நடத்துவார் என்று தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

# மணலாற்றில் புலிகளின் பதுங்குகுழிகள்; யுத்தநிறுத்தத்தை மீறும் செயல் அல்ல!

## போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

மணலாற்றுப் பகுதியில் விடுதலைப் புலிகள் பதுங்குகுழி அமைத்துள்ளமை - யுத்தநிறுத்த மீறல் அல்ல என, கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

மணலாறு - ஆனைவிழுந்தான் பகுதியில், புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு முரணாக, விடுதலைப் புலிகள் பதுங்குகுழிகள் அமைத்துள்ளதாக, இராணுவத்தினர் - யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் புகார் தெரிவித்திருந்தனர்.

இராணுவத்தினரின் இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட கண்காணிப்புக் குழுவினர், இந்தச் சம்பவம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் செயல் அல்ல, என்று தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் பதுங்குகுழிகள் தொடர்பாக, படையதிகாரிகளுக்கு - கண்காணிப்புக்குழுவினர் விளக்கமளித்துள்ளனர் எனவும் கூறப்படுகிறது.

கண்காணிப்புக்குழுவின் இந்த அறிவிப்பை, படை உயரதிகாரிகள் - இராணுவ முகாம் பொறுப்பதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியிருப்பதாக, படைவட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (01)

EXPOAIR your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# ஆய்ந்தொரு முடிவை அருள்

நல்லையில் இருந்திங்கு நல்லாட்சி செய்யும்
வல்லோனே வள்ளி மணாளா - நல்லுலகில்
எல்லையில் இன்பம் எல்லோரும் காண
நல்லருளை நீயும் நல்கு.

போருடன் எம்முடைமை போயகன்று விட்டதனை
ஆறுடன் கதைப்போம் ஆறுமுகா - வேருடன்
சாய்ந்தின்று தமிழரெலாம் தரமிழந்து போகாமல்
ஆய்ந்தொரு முடிவை அருள்



பட்டதுயர் போதுமையா பன்னிருகை வேலவா
விட்டகுறை யெதுவென விளம்பு - இட்டமுடன்
அக்குறையை நீக்கி அடிபணிவோம் உன்னிடம்
எக்குறையும் வராது இயம்பு

## இரண்டு விமானங்கள் கொள்வனவு

விமானப் பயணிகளின் வசதி கருதி, இலங்கை பயணிகள் விமான சேவை நிறுவனம் - புதிதாக இரண்டு விமானங்களைக் கொள்முதல் செய்யவுள்ளது.

விமானங்களில் அதிகளவான பயணிகள் பிரயாணம் மேற்கொள்வதால், அவர்களின் வசதி கருதியே, இந்த விமானங்கள் கொள்முதல் செய்யப்படவுள்ளன.

இந்த இரண்டு விமானங்களும் 20 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியானவையாகும்.

## செயலகக் கூட்டங்கள் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

மாவட்டச் செயலகத்தில்- நாளை நடைபெறவிருந்த சகல கலந்துரையாடல்களும், கூட்டங்களும் பிற்போடப்பட்டுள்ளன.

அவையாவும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, முன்னர் குறிப்பிட்ட நேரங்களில் நடைபெறுமென யாழ்.மாவட்ட செயலக செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது.

இவற்றில் இளைஞர் படையணி கூட்டம், மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம், மாவட்ட மீளாய்வுக் கூட்டம், பிரதேச செயலர்களுக்கான கூட்டம் என்பன நடைபெறவுள்ளன.


நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஓராண்டு நிறைவையொட்டி நடத்தப்படும்
சிறுகதை; கவிதைப் போட்டிகள்

சிறுகதை – முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
மூன்றாவது பரிசு - 2,000 ரூபா

கவிதை – முதலாம் பரிசு - 6,000 ரூபா
இரண்டாம் பரிசு - 4,000 ரூபா
மூன்றாவது பரிசு - 2,000 ரூபா

நிபந்தனைகள்
- எழுதுபவரின் சொந்த ஆக்கமாக இருக்க வேண்டும். ஏறகனவே பத்திரிகையிலோ, ஏனைய ஊடகங்களிலோ வெளிவராதவையாக இருக்க வேண்டும்.
- மொழிபெயர்ப்புக் கதைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- கதைகள் ஈழநாடு பத்திரிகையின் ஒரு பக்கத்துக்குள் அடங்குவதாக இருக்கவேண்டும். தட்டச்சில் பொறிக்கப்பட்டவையாக இருந்தால் 5 பக்கங்களுக்குள்ளும் கையால எழுதப்பட்டதானால் 7 பக்கங்களுக்குள்ளும் இருத்தல் வேண்டும்.
- கதைகள் சமகால, சமூகப் பிரச்சினைகளை மையமாக வைத்து எழுதப்படல் வேண்டும்.
- கதைகள் யாவும் 10.09.2003 ஆம் திகதிக்குள் "நமது ஈழநாடு" 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.
- நமது ஈழநாடு பத்திரிகையில் கடமைபுரிபவர்களோ, அவர்கள் குடும்பத்தவர்களோ இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.
- பரிசுக்குரிய ஆக்கங்களை தேர்வு செய்வது நடுவர் குழுவினதும், ஆசிரியரினதும் முடிவாகும்.

மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி பற்றிய விபரங்களை நாளை எதிர்பாருங்கள்.



மலிவு விலையில் புத்தகங்கள்
நல்லூர்க் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு
ஆகஸ்ட் 03 முதல் 30 வரை
புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்
(நல்லூர் சிவாலயம் முன்பாக)
சகல புத்தகங்களுக்கும் 10 % கழிவு
சிறுவர் கதைகள், பாடல்கள், சிறுகதை, நாவல்கள், ரமணி சந்திரனின் சகல கதைகளும், இந்து சமய நூல்கள், தமிழ் இலக்கிய நூல்கள், கம்யூட்டர் நூல்கள், ஆங்கிலம், தமிழ் சிங்கள அகராதிகள், பாடசாலைப் புத்தகங்களுக்குரிய செயல் நூல்கள் பயிற்சிகள் வினா-விடைகள் இன்னும் பல.
ஸ்ரீ லங்கா புத்தகசாலை
234,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி 021-2222573
(சி-1339)



ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தினவெளியீடு
விஜயகாந், கிரண் நடித்த
தென்னவன்





காட்சிநேரம்
10.30, 2.30, 6.30, 9.30
(சி-1284)

நிறைஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன், கிரண் நடித்த
பரசுராம்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
BULE STREAK
இரவுக் காட்சி. 8.45 (பு.நே)
(சி-1285)











விவசாயப் பெருமக்களே !
சைவ உணவக உரிமையாளர்களே!
ஆயுர்வேத வைத்திய சிகாமணிகளே!

எமது ஸ்தாபனத்திற்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள

எம்மிடம்
- நெல் குற்றும் இயந்திரம்.
- உமி நீக்கும் இயந்திரம் (China).
- அரிசி பொலிசர் (China).
- மிளகாய், உழுந்து, கோப்பி அரைக்கும் (நவின் கெனடி பிராண்ட்) உலகப் பிரசித்திபெற்ற இயந்திரம்.
- எந்த விதமான கடின உழைப்பிற்கும் அதிசக்திவாய்ந்த (லிஸ்ரரைப்) டீசல் என்ஜின் (கெனடி நவின்) மாக் 20H.P. 10H.P. குதிரைசக்தி கொண்டவை. பெற்றரைப் 25 H.P. 15 H.P. 7 1/2 H.P. 6 H.P. (குதிரை சக்தி) கொண்டவை. விசை கூடிய என்ஜின் (கெனடி நவின்) R.P.M. 1500.
- கோப்பி அரைக்கும் இயந்திரம். சைவ உணவகத்துக்கு உழுந்து, சட்னி, சம்பல் போன்று நீர்சேர்த்து அரைப்பதற்கு கெனடி நவின் ஈர அரையல் இயந்திரம். 2, 3, 5, 7 1/2, 10, 15, 20 கிலோ வரை அரைக்கும் அளவுகளில் உண்டு. இவற்றில் மருந்து மூலிகைகளும் அரைக்க முடிவதால் வைத்திய சிகாமணிகளுக்கும் உகந்தது.
- ஈர அரிசி அரைக்கும் China மில். 17, 23, 37, 42 போன்ற தங்கள் தேவைக்கேற்ப அளவுகளில் இயந்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இவற்றுக்கான சகல உதிரிப்பாகங்கள் றபர், ரோமம் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட பட்டிவகைகள் எல்லா அளவுகளிலும் "V" பெல்ட் (பட்டி) வகைகள். றபர் ஹோஸ், கிறைண்டர் பிளேற், சல்லடை வகைகள், மோட்டார் ஸ்ராட்டர் எல்லாம் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளளாம்.
- வங்கிக் கடன் வசதி அல்லது குத்தகை வசதி தேவையானால் ஒழுங்கு செய்து தரப்படும். (40 % வரை)

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்

நேரில் வரவும்
ஏக இறக்குமதியாளரும் விநியோகஸ்தரும் 212, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 021-2225542

சமுத்திரா ரேட்ஸ் லிமிட்டட்
117 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
☎ : 021 - 222 2938
(சி-1358)

புதிய ஒப்பந்தம் இல்லாது

# ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் தேர்தலில் போட்டியிடாது

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(அம்பாறை)

"இன்னொரு புரிந்துணர்வு ஒப்பந்தம் இல்லாமல் - இனிவரும் எந்தத் தேர்தலிலும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - ஐக்கியதேசியக் கட்சியோடு இணைந்து போட்டியிடப் போவதில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியை, கடந்த ஒன்றரை வருடத்திற்கு மேலாக ஆட்சியில் அமர்த்தி, பெற்ற படிப்பனைகளில் இருந்து நாங்கள் இந்த நிலைப்பாட்டிற்கு வந்துள்ளோம்."

சம்மாந்துறையில் நடைபெற்ற அபிவிருத்தி விழா பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம். அன்வர் இஸ்மாயில் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது -

நாட்டில் தேர்தல்கள் அடுத்தடுத்து வரப்போகின்றன. இன்றிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அரசு, அடுத்த வருடம் ஜனவரிக்கு முன் ஐந்து மாகாணசபைத் தேர்தலைச் சந்திக்க நேரிடும். இத்தேர்தல்கள் தான் இந்த அரசு ஆட்சியில் தொடர்ந்து இருக்குமா, இல்லையா என்பதைத் தீர்மானிக்கப்போகின்றன.

இந்தத் தேர்தல்களில் வட - கிழக்கிற்கு வெளியே ஒவ்வொரு மாகாணங்களிலும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு இருக்கும் வாக்குகளே முக்கியம்.

முஸ்லிம்களின் பாதுகாப்புப் பற்றி, அரசு தொடர்ந்தும் நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்குமாக இருந்தால், அதற்கான சரியான பதிலை அடுத்த தேர்தல் ஒன்றுக்கு முன், அவர்கள் சொல்லியாகவேண்டும்.

சமாதானப் பேச்சு ஆரம்பித்த காலத்திலிருந்து, அரசு கடைப்பிடித்துவரும் நெகிழ்வுப் போக்கு - புலிகளை சமாதானப் பேச்சில் தக்க வைத்துக் கொள்ளவேண்டும் என்ற காரணத்தால் ஆகும்.

எனினும், மனவேதனையோடு விமர்சனங்களுக்கு மத்தியிலும் நாம் அரசை பாதுகாத்து வருகின்றோம். ஆனால், தொடர்ந்து அரசைப் பாதுகாக்கவும், தேர்தல்களில் வெற்றி பெறச்செய்யவும் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்கமுடியாது.

இனி - முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு என்பது, வட- கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பை மையப்படுத்தியே இருக்கும். நாம் கேட்பது முஸ்லிம்களின் பாதுகாப்பு, சுயாட்சி என்னும் நியாயமான கோரிக்கையைத் தான். இதற்கு அரசு ஆதரவும், அனுசரணையும் தந்து, விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களில் தீர்வு ஒன்று வரும்போது, முஸ்லிம்களுக்கு சார்பாக அழுத்தத்தை அரசு முற்றுமுழுதாக பிரயோகிக்க வேண்டும். இல்லையேல் முஸ்லிம்களுடைய நிரந்தரமான, நிம்மதியான தீர்வை நியாயப்படுத்தும் தரப்பு எது என்பதனை அடையாளப்படுத்துவது, எதிர்காலத்தில் முஸ்லிம் காங்கிரஸிற்கு முக்கிய பொறுப்பாக இருக்கும்.

ஆனால், சமாதானத்தைக் குலைத்துவிட்டு, யுத்தத்தைக் கொண்டு வந்து, எமது இனத்தினுடைய அபிலாஷைகளை பாதுகாக்க வேண்டுமென்பது, முஸ்லிம் காங்கிரஸின் நோக்கமாக ஒருபோதும் இருக்காது.

இடைக்கால நிர்வாகசபை சம்பந்தமான பேச்சுகள் ஆரம்பமாகவிருக்கின்றன. இந்தப் பேச்சுக்களின் போது, அரசின்போக்கை அவதானிக்கப் போகின்றோம். தமிழர் வேண்டி நிற்கும் வட - கிழக்கில், முஸ்லிம்களோடு அவர்களுடைய சுயாட்சியைப் ஏன் பங்குபோடமுடியாது எனக் கேட்கின்றேன்.

முழுநிலத்தையும் தமது மேலாதிக்கத்தில் தரவேண்டுமென்ற அழுத்தத்தோடு நிற்பதை உற்றுநோக்கும் போது, புலிகளின் மேலாதிக்கத்தின் கீழ் நியாயம் கிடைக்குமெனப் போய், எப்படி வாழமுடியும். எனினும், இதற்கான ஆணையை - புலிகள் என்றோ ஒருநாள் தேர்தல் ஒன்றைச் சந்திக்கும்போது, முஸ்லிம்களிடத்தில் பெறுவதற்காக, அவர்களது நடவடிக்கைகளை இன்றிலிருந்து மாற்ற வேண்டும். யுத்தகாலத்தில் முஸ்லிம்களோடு மோதுவதும், சமாதான காலத்தில் தமிழ் - முஸ்லிம் உறவுகளைச் சரி செய்யும் முயற்சியில் ஈடுபடுவதும், பின்னர் யுத்தம் நடக்கும்போது முஸ்லிம்களைப் பழிவாங்குவதுமாக, புலிகளின் படலம் தொடரக்கூடாது. தமது நடவடிக்கைகள் மூலம் முஸ்லிம்களுடைய அரசியல் அபிலாஷைகளை நசுக்கமாட்டோமென வெறும் உதட்டளவில் பேசும் இயக்கமாகப் புலிகள் இயக்கம் இருக்கக் கூடாது, இருக்கவும் முடியாது என மேலும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் மிலிந்த மொறகொட மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(07)

## கடல்வள ஆசிரியர் செயலமர்வு

(கொழும்பு)

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடக்கவிருக்கும் க.பொ.த. (சா/த) பரீட்சையில் பாடசாலையிலிருந்து கடல்வளப் பாடத்திற்குத் தோற்றவுள்ள மாணவர்களைப் பரீட்சைக்குத் தயார்படுத்துவது தொடர்பான செயலமர்வு நாளை மறுநாள் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழகக் கடல்வள அபிவிருததி நிலைய விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கடல்வளம் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.



மடுமாதா ஆலயத்தில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற திருவிழாவின்போது, திருச்சொரூபபவனி இடம்பெறுவதை படத்தில் காணலாம்.

இராணுவப் பொலிஸ் எனக்கூறி

# 28 லட்சம் பெறுமதியான உடைமைகள் அபகரிப்பு!

(கொழும்பு)

வரக்காபொல - வேயகதே பிரதேசத்தில் அமைந்திருந்த ஆடைத் தொழிற்சாலை ஒன்றிலிருந்து, இராணுவப் பொலிஸார் என்ற போர்வையில்- 28 இலட்சம் ரூபா பெறுமதியான துணிகளையும், இயந்திர உபகரணங்களையும் கொள்ளையர்கள் அபகரித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கொள்ளைச் சம்பவம், கடந்த 12 ஆம் திகதி இரவு 2 மணியளவில் இடம்பெற்றது.

கொள்ளையர்கள், தாங்கள் இராணுவப் பொலிஸார் என்றும், தாங்கள் ஆடைத் தொழிற்சாலையைச் சோதனையிடவேண்டும் என்றும், காவற்கடமையில் ஈடுபட்டவர்களிடம் கூறி உட்பிரவேசித்தனர். பின்பு, அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு அதிகாரிகளைத் தாக்கிவிட்டு, இந்தக் கொள்ளையை அவர்கள் நடத்தியுள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக, பொலிஸார் விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

# கொழும்பில் பொங்கு தமிழ் நடந்தால் அதிரடி நடவடிக்கை எடுக்கப்படும்!

## சிஹல உறுமய அறிவிப்பு

பொங்குதமிழ் கொழும்பில் இடம்பெற்றால், அதற்கெதிராகப் பல அதிரடி நடவடிக்கைகள் எடுக்கப்போவதாக சிஹல உறுமய தெரிவித்துள்ளது.

இரு அரச அதிகாரிகள், தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அரசின் ஆதரவோடு கொழும்பில் பொங்குதமிழ் நிகழ்வுகள் நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடந்துவருகின்றது என்று, சிஹல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

பல கொலைகளுக்குக் காரணமாக உள்ள விடுதலைப் புலிகள் அமைப்பினருக்கு, இப்படியாக நிகழ்வு ஒன்றை நடத்துவதற்கு இடமளிக்கக் கூடாது என்று கூறிய அவர், அப்படி நடந்தால் அதற்கெதிராக நடவடிக்கைகள் எடுக்க நேரிடும் என்றும் கூறியுள்ளார்.

# கஷ்டப்பிரதேச ஆசிரியர்களுக்கு 36 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

## கல்வி அமைச்சு அறிவிப்பு

கஷ்டப் பிரதேசங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு, இடைக்காலக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு, 36 இலட்சம் ரூபாவை மாகாணசபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக, கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

2001 ஆம் ஆண்டிலிருந்து கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றியவர்களுக்கு, இந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஜி.அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கஷ்டப் பிரதேச ஆசிரியர்களுக்கு, இடைக்காலக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு, திறைசேரியிடம் 56 இலட்சம் ரூபா நிதி கோரப்பட்டுள்ளது என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.





அம்பாறை மாவட்ட தமிழ் - முஸ்லிம் காணிப்பிரச்சினை தொடர்பாக நடைபெற்ற உபகுழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற புலிகளின் பிரமுகர்கள் வரவேற்கப்படுவதை முதற் படத்திலும், பேச்சுக்களில் புலிகளின் பிரமுகர்கள் பங்கேற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் நடந்த

# அபிவிருத்தி மேம்பாடு தொடர்பான விழிப்புணர்வூட்டும் கருத்தரங்கு!

மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் - பிரதேச மட்ட அபிவிருத்தி மேம்பாடு தொடர்பான விழிப்புணர்வூட்டும் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் பட்டிப்பளை பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பட்டிப்பளை பிரதேச செயலர் எஸ்.அமலநாதன் தலைமையில் நடந்த கருத்தரங்கில் -கிராமசேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், பட்டிப்பளைப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.

இந்நிகழ்வுக்கு மட்டு-அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், தளபதி ராம், மட்டு. துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் கிருஷன், மட்டு. மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பிறேமினி, மாவடி முன்மாரிக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சுதா, மாவடி முன்மாரிக்கோட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் தரன், மேலதிக அரசாங்க அதிபர் புண்ணியமூர்த்தி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## தீயில் எரிந்த பெண் மரணம்

தீக்காயங்களுடன் கடந்த 6 ஆம் திகதி, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளம் குடும்பப்பெண்ணொருவர், சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று மரணமானார்.

இந்தச் சம்பவத்தில் - 4 ஆம் வட்டாரம், மண்டைதீவைச் சேர்ந்த இளந்தீபன் இளம்மதி (வயது 24) என்பவரே மரணமானவர் ஆவார்.

அடுப்பைப் பற்றவைப்பதற்காக, தீமூட்டிய வேளையிலே, இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப் படுகிறது. இந்தப் பெண் திருமணம் முடித்து ஆறு மாதங்களே ஆகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண கல்வி வலயப் பாடசாலைகளில் குடிநீர் வசதிக்கு 21 லட்சம் ரூபா ஒதுக்கீடு!

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகளில், குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு - யுனிசெப் நிறுவனம் சுமார் 21 இலட்சம் ரூபாவை நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ,யாழ். கல்வி வலயத்தில் 15 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றிற்கு கிணறுகள் நீர்த்தாங்கிகள் மற்றும் நீரிறைக்கும் இயந்திரங்கள் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளை, பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களினூடாக வலயத்திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

கல்வியங்காடு இ.த.க.பாடசாலை, சென். றோச் வித்தியாலயம், கோண்டாவில் றோ.க.த.க. பாடசாலை, சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை, கரந்தன் ராமுப்பிள்ளை வித்தியாலயம், அச்செழு மெ.மி.த.க.பாடசாலை வண்ணார்பண்ணை வைத்திலிங்கம் வித்தியாலயம், செட்டித்தெரு மெ.மி. த.க. பாடசாலை, தோப்பு அருள் நந்தி வித்தியாலயம், கோப்பாய் வடக்கு றோ.க.த.க பாடசாலை, நவக்கிரி மெ.மி.த.க. பாடசாலை, சிறுப்பிட்டி இ.த.க.பாடசாலை, இருபாலை சி.சி.த.க.பாடசாலை என்பவற்றிற்கே குடிநீர் வசதிகள் செய்துகொடுக்கப் படவுள்ளன.

## புகுமுக எழுதுநர்களுக்கான பயிற்சி நெறி!

முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களத்தால், புகுமுக எழுதுநர்களுக்காக நடாத்தப்படும் பயிற்சிநெறி, யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் - இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து 22 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

# ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டங்களை பகிஷ்கரிக்க முஸ்லிம் காங்கிரஸ் முடிவு!

ஐக்கிய தேசியக் கட்சி ஒழுங்கு செய்யும் எல்லாக் கூட்டங்களையும், பகிஷ்கரிப்பதற்கு, இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் உயர் பீடத்தால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் சேனரத் கப்புக்கொட்டுவ முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிராக பல நடவடிக்கைகளை எடுத்துவருவதால், இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்று, ஜே.ஏ.பாயிஸ் தெரிவித்துள்ளார்.

புத்தளம் மாவட்டத்தில் - முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிராக நடத்தப்படும் சூழ்ச்சிகளை நிறுத்தாது போனால், தமது அரசியல் நடவடிக்கைகளை மாற்றிக்கொள்ள நேரிடும் என்றும், அவர் மேலும் கூறினார்.

# கிளிநொச்சிப் பிரதேச சபை எல்லைக்குள் முன் அனுமதிபெற்று கட்டடம் அமைக்கவும்

## கிளிநொச்சி அரச அதிபர் அறிவிப்பு

(கிளிநொச்சி)

ஏ-9 பிரதான வீதி மற்றும் கிளிநொச்சி பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில், குறிப்பிட்ட சில நிர்ணயிக்கப்பட்ட எல்லைக்குள் தற்காலிகமாகவேனும் கட்டடங்களை அமைக்கவோ அல்லது திருத்தங்களை மேற்கொள்ளவோ அனுமதி வழங்க வேண்டாம் என, கிளிநொச்சி அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அத்தியாவசியக் கூட்டத்தில் வைத்து, பிரதேச செயலாளர்களுக்கு மேற்படி பணிப்புரையினை அரச அதிபர் விடுத்துள்ளார்.

நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வீதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட அளவுகளுக்கு அப்பால் கட்டடங்களையோ அல்லது கம்பங்களையோ அமைக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், மேற்படி எல்லைக்குள் சில கட்டடங்கள் தற்போது புனரமைக்கப்பட்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலையிட்டு, மேற்படி நடவடிக்கையில் ஈடுபடுபவர்களைத் தடுத்து நிறுத்த வேண்டியதுடன், தற்காலிகமாகவேனும் எவரும் நிர்ணயிக்கப்பட்ட எல்லைக்குள் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள அனுமதி வழங்கக்கூடாதென, பிரதேச செயலர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். (17)





சர்வதேச கூட்டுறவு தினவிழாவன்று நடைபெற்ற கலை நிகழ்வில் - இடம்பெற்ற கட்டைவேலி மனோகர முன்பள்ளியினரின் "சமாதானக் கப்பல்" என்னும் நிகழ்வின் ஒரு காட்சியை முதலாவது படத்திலும், முன்பள்ளி மாணவி தாட்சாயினியின் நடன நிகழ்வை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# தொழிலில் ஈடுபட்ட மீனவர் கடற்படையினரால் மிரட்டல்

(வடமராட்சி)

வடமராட்சிக் கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவரை மிரட்டி, தொழிலில் ஈடுபடவிடாது கடற்படையினர் திருப்பி அனுப்பியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு வல்வெட்டித்துறைக் கடற்பரப்பை அண்டிய பகுதியில் இடம்பெற்றது. வல்வெட்டித்துறையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை குணசுந்தரம் என்பவரே கடற்படையினரின் மிரட்டலுக்கு உள்ளானார்.

கடற்தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை, ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் மீன்பிடிப்படகினை நெருங்கி - இவரை வலைகளை எடுத்துக் கொண்டு உடன் வெளியேறுமாறு எச்சரித்துள்ளனர்.

இதனையடுத்து இவர் கரை திரும்பியுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாகக் கண்காணிபபுக்குழுவிடமும், விடுதலைப் புலிகளின் வல்வெட்டித்துறை அலுவலகத்திலும் மீனவர் முறைப்பாடு செய்துள்ளார்.

## கிளிநொச்சிக்கு மாகாண பிராந்திய ஆணையாளர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திற்கான மாகாணசபையின் பிராந்திய ஆணையாளராகத் திருமதி சிவலிங்கம் - வட - கிழக்கு மாகாண ஆளுநரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தமது கடமைகளை அண்மையில் பொறுப்பேற்றார். மாகாணசபையின் கிளிநொச்சி மாவட்ட ஆணையாளராகக் கடமைபுரிந்த சுந்தரம், வவுனியா - மன்னார் மாவட்ட ஆணையாளராக இடமாற்றம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (17)

## மழையால் வெங்காயச் செய்கையாளர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

தற்போது பெய்துவரும் மழை காரணமாக, வெங்காயச் செய்கை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

அளவெட்டி, இணுவில், புத்தூர், சிறுப்பிட்டி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த விவசாயிகளே இந்த மழையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அறுவடை செய்த வெங்காயங்கள் - வீடுகளுக்கு எடுத்துச் செல்ல முன், மழையில் நனைவதால் அழுகிப் போய்விடும் வாய்ப்புக்கள் உள்ளதாகவும் தெரிவிக்கபபடுகிறது.

அதேவேளை, வயற்காணிகளில் வெள்ளம் தேங்கி நிற்பதாலும், வெங்காயம் நீரில் மூழ்கிப் பழுதடையும் வாய்ப்பு உள்ளதாகவும், இதனால் பெருமளவு நஷ்டம் ஏற்படும் நிலை தோன்றியுள்ளதாகவும் விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது.

# பிரமந்தனாறு முன்பள்ளிக்கு கொட்டகையின்றி அவதி!

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பிரமந்தனாறு கிராமத்திலுள்ள முன்பள்ளி - கொட்டகையில்லாமல், முன்பள்ளிச் சிறார்களின் ஆரம்பக்கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு இயங்கி வந்த கிளியன் முன்பள்ளியின் கொட்டகை - கடந்த வருடம் இறுதியில் ஏற்பட்ட வெள்ளத்தால், முற்றாகச் சேதமடைந்துள்ளது.

இதன்பின்னர், நலன்புரிநிலையத்திலிருந்து சிறு வட்டக்கொட்டகையில் - முன்பள்ளி இயங்கி வந்தது. எனினும், இடப்பற்றாக்குறை நிலவும் இந்த வட்டக்கொட்டகை - மேய்ச்சல் காலம் கடந்தால், மழை நீர் உட்புகுந்து, நிலம் நனைந்து, சேறும் சகதியுமாக மாறும்போது, முன்பள்ளி இயங்கமுடியாதநிலை ஏற்படுவதனால், முன்பள்ளிச் சிறார்களின் கல்வி பாதிப்புக்குள்ளாகி வருகிறது.

எனவே, இம்மாணவச் சிறார்களின் நிலையைப் போக்குவதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் தரப்பில் கேட்கப்பட்டுள்ளது. (17)


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்

பெயர் : பு.பிரஷாஜினி
முகவரி : 198, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.



முதலாவது அகவையில்



பெயர் : வ.கனுஷன்
முகவரி : அல்வாய் கிழக்கு, அத்தாய்.

நாலாவது அகவையில்

பெயர் : சி.நிதிஜா
முகவரி : முருகன் கோவிலடி, நெல்லியடி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
------------------
பெற்றார் ஒப்பம்


# முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு சி.ஏ.எஸ். நிறுவனம் உதவி புரிகின்றது

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கிலுள்ள இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தில் மீளக் குடியமரமுடியாது, முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு - மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு, சி.ஏ.எஸ். பாம் என்ற நிறுவனம் முன்வந்துள்ளது.

வலி. வடக்குப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து, முகாம்களில் தங்கியிருக்கும் பத்து முகாம்களுக்கு, மேற்படி நிறுவனம் உதவி வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிறுவனம் முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு வதிவிடங்களை ஏற்படுத்தல், மலசலகூடம், குடிநீர் போன்ற அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்தல் கல்வி, சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், நிவாரணப் பொருட்களை வழங்கல் போன்ற பல்வேறு உதவிகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தில் உடுவில், சண்டிலிப்பாய், கோப்பாய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் - தலா இரு முகாம்களும், தெல்லிப்பளைப் பிரதேச செயலர் பிரிவில் - ஒரு முகாமும் சங்கானைப் பிரதேசத்தில் மூன்று முகாம்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்த உதவிகளை வழங்குவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையை இந்த நிறுவனம் மேற்கொண்டு வருவதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## மோசமான நிலையில் வீதி

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கிலுள்ள வெற்றிலைக்கேணி பாடசாலைக்கு முன்பாகவுள்ள - கடற்கரை வீதி, தாளையடி - கட்டைக்காடு வீதி என்பன மிகமோச மான நிலையில் குன்றும் குழியுமாக உள்ளதால், பாடசாலை மாணவர்கள், கடற்தொழிலாளர்கள் போக்குவரத்துக்குச் சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக உதவி அரசாங்க அதிபரின் கவனத்துக்கு அப்பகுதி மக்கள் கொண்டு வந்துள்ளார்கள். (17)

# தேசிய விளையாட்டுவிழா யாழில் அடுத்த மாதம் நடைபெறலாம்?

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பித்தால், எதிர்வரும் நவம்பர் மாத நடுப்பகுதியில் தேசிய விளையாட்டு விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்த முடியும் என, காணியமைச்சர் ராஜித சேனாரத்ன நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்த அமைச்சர் ராஜித சேனாரத்ன - 'நமது ஈழநாடு' செய்தியாளருக்கு வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. இவ்வாறான சமாதானப் பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பித்தால், நவம்பர் மாதத்தின் 15 ஆம் திகதிமுதல் 18 ஆம் திகதிவரை சமாதான தேசிய விளையாட்டுவிழாவை யாழ்ப்பாணத்தில் நடத்தமுடியுமென்றார்.

கிளிநொச்சியிலிருக்கும் வலைப்பந்தாட்ட அணிக்கும், தேசிய வலைப்பந்தாட்ட அணிக்கும் இடையில் போட்டிகளை நடாத்துவதற்குத் தாம் திட்ட மிட்டுள்ளதாக, அவர் மேலும் தெரி வித்தார்.

# இலக்கியச்சோலை

# எனது ஊரிலும் தான்

நாவல்

அங்கம்-4

எத்தனை காலம் இங்கு இருக்கப்போகிறேனோ தெரியவில்லை. இவர்களைக் கோபித்துப் பிரயோசனமில்லை. இவர்களோடுதான் என் காலம் செல்லப்போகிறது. பொறுமை, பொறுமை.

படுக்கையில் கிடந்தும், நித்திரை வரவில்லை. சுற்றிக் கொண்டிருந்த மின்விசிறியை நிறுத்தினேன். முதலாளி மகனிடம் கொடுத்த கடிதங்களுக்கு வீட்டிலிருந்தும், காந்தனிடமிருந்தும் பதில்கள் வந்தன. எல்லாக் கடிதங்களும் சில மாதங்கள் கழித்தே வந்திருந்தன.

கடிதங்கள் வந்து சேர்வதற்கிடையில் என்னென்ன மாற்றங்கள் நிகழ்ந்தனவோ?

காலம் என்ன மாதிரி ஓடுகின்றது.

நான் இங்கு வந்து ஒரு வருடத்துக்கு மேலாகிவிட்டது.

அங்கிருந்து வருகின்ற கடிதங்களிலே ஒன்றை மட்டும் முக்கியமாகக் குறிப்பிட்டு எழுதுவார்கள்.

"அதிகம் கதைக்காதே. கவனமாக இரு. எங்கள் கடிதத்தை எதிர்பாராமல் நீ ஒழுங்காகக் கடிதம் எழுது".

ஊர் நிலை நான் இருந்தபோது, காணப்பட்டத்தைவிட மிக மோசமாம்.

கொஞ்சம் கொஞ்சமாகச் சூழ்நிலை அமைதியானது. எனக்கு இன்னமும் நித்திரை வரவில்லை.

இன்று கனவேலைகள் பஸ்ஸிற்குச் செய்தாக வேண்டும். முன் ரயர்கள் நன்றாகத் தேய்ந்துவிட்டன. அவற்றை மாற்றவேண்டும். ரீவியிலே போடும் படமும் தெளிவாக இல்லை என்ற புகார் வேறு. அன்று பெரிதாகச் சத்தம் போட்டு ரகளை பண்ணிவிட்டார்கள். உடனடியாக இவைகளைச் செய்தாக வேண்டும்.

காலையிலே சிரித்தபின் பத்தாம் இலக்க பஸ் ஏறி எக்மோரினை அடைந்தேன். அலுவலகப் பையனைத் தேடி வாங்கி வரச்சொல்லிவிட்டு, அன்றைய பத்திரிகையை எடுத்துப் பிரித்தேன். இலங்கை விடயம் வந்திருந்தது.

.......... மோதல் தொடர்கிறது. ஊரடங்கு தொடர்ந்து அமுல். குடித்து முடிய பஸ்ஸும் வந்துவிட்டது. உடன் எழுந்துவிட்டேன். வேலையை முடிக்கவேண்டும். பின்னேரம் பஸ் வேலையை முடித்து, அலுவலகத்துக்கு முன்னால் நிறுத்தி விட்டு, கீழே இறங்கி நடந்தபோது, யாரோ கூப்பிட்டார்கள்.

பார்த்தால் ஊரில் எனக்குப் பழக்கமான நபர்போலத் தெரிந்தது. உடன் ஞாபகத்திற்கு வரவில்லை. கொஞ்ச நேரத்திலே புரிந்தது. "நீ சரஸ்வதி ரீச்சரின் மகனிதானே? ஆளே மாறிப்போனீர்"

"உம்மில ஒரு மாற்றமும் இல்லை. முந்திப் பார்த்த மாதிரித்தான் இருக்கிறீர்" என்று அவர் கூறிக்கொண்டிருக்கும்போது, பின்னால் ஒரு பெண்ணும், இரண்டு பிள்ளைகளும் நிற்பது தெரிந்தது. அவர்களைப் பார்த்து விட்டு நான் விழித்தேன்.

"என்ன நிறைய யோசிக்கிறீர்? இவர் இந்த ஊர்ப் பொம்பிளைதான். விரும்பினம், கல்யாணம் செய்தம். வீட்டுக்குக் கனநாளைக்குப் பிறகுதான் தெரியும்".

"இப்ப எங்க ஆயத்தம்?"

"மகனுக்கு ரஜனி படம் என்றால் இஷ்டம். அதான் அழைச்சிட்டுப் போறம் என்றார் அவர் மனைவி."

"இரண்டு பேருக்கும் என்ன பேர்?"

"வினோத், லாவண்யா".

என்னைப் பற்றியும், ஊரைப் பற்றியும் விசாரித்தார்கள்.

ஏதோ நல்ல காலம் நான் எண்பத்து மூன்றிலேயே இங்க வந்திட்டன். மற்றவை ஊரில இருந்து கஷ்ரப்படுகினம்" என்றார். பிள்ளைகள் இருவரும் தனியார் கல்லூரியில் ஆங்கிலமூலம் கற்பதாகக் கூறிவிட்டு, என்னிடம் விடை பெற்றுச் சென்றுவிட்டார்கள்.

நானும் இங்கேயே கல்யாணம் செய்துவிடலாமா?

வசதியான வாழ்க்கை. சினிமா, நாடகம், பீச் என்று சுற்றிக்கொண்டு திரியலாம்.

என்ன கவலை?

எல்லாம் மனம்தான். ஒரு வருடம் ஓடினால், எனக்கும் இந்த மாறுதல் வந்துவிடுமா?

காலம்தான் தோட்டாக்கள் போல விரைந்தது.

எனக்கு என்மீது நம்பிக்கை இருந்தது. இடையிலே முதலாளி வந்து போனது, கனவுபோல இருந்தது. இங்கு தொழில் பிரச்சினை இல்லாமற்போவது குறித்துத் திருப்திப்பட்டார். ஊருக்குப் போகலாம் என்றார். அவர் இங்கு வந்து தங்கியிருந்த நாளே குறைவு. காந்தனிடமிருந்து கடிதம் வந்தது. தனக்கு வவுனியாவில் வேலை கிடைக்கும் என்று எழுதியிருந்தான். ஸ்ரீராம் இல்லாத குறையைத் தீர்ப்பதற்கு, மனம் விட்டுப்பேசுவதற்கு ஒரு நண்பர் வேண்டும். அது இன்னமும் எனக்குக் கிடைக்காதவொன்று.

## சி. கதிர்காமநாதன்

இரவு சாப்பிட்டுவிட்டுத் திரும்பும்போது, நாகலிங்க மரத்தடியில் ஒருவர் தனியாக அமர்ந்திருந்தார். சற்றுப்பருத்த உடல். முகத்திலே கண்ணாடி அணிந்திருந்தார். ஸ்ரீராமும் இப்படித்தான் கண்ணாடி அணிந்திருப்பார். அவர் என்னைப் பார்த்துச் சிரித்தார்.

எனக்குச் சந்தோஷமாக இருந்தது.

"நீங்க சிலோன் தானே?"

சரி எனத் தலையாட்டிவிட்டுக் கேட்டேன்.

"எப்படித் தெரியும் உங்களுக்கு?"

"பிரகாஷ் சொன்னான். சாப்பிடக் கடைக்குப் போனீங்க என்று".

"நான் நினைத்தன். முகத்தைப் பார்த்துப் பிடிச்சுப் போட்டிங்க எண்டு. இங்க கனபேர் அப்படித்தான் சொல்லிறார்கள். முகத்தைப் பார்த்தாலே சிலோன் எண்டு தெரியுமாம்".

அவர், நான் சொன்னதைக் கேட்டுப் புருவங்களை உயர்த்திப் பார்த்தார்.

"எல்லோரும் அப்படிச் சொல்லமாட்டாங்க".

அன்றிரவு நானும், சிதம்பரமும் படுக்கப்போகும்போது, இரவு 12 மணிக்கு மேலாகிவிட்டது. ஆமாம். அவர் பெயர் சிதம்பரம் என்று அறிந்தேன். அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பு படிக்கிறார். அவரது பெற்றோர், சகோதரங்கள் எனது பிளாட்டிலேயே குடியிருக்கிறார்கள், எல்லா விடயங்களும் கதைத்தோம். தன்னைப் பற்றிச் சொன்னார். என்னைப் பற்றியும் அறிந்து கொண்டார். எனது நிலையைக் கண்டு ஆதரவாகச் சொன்னார்.

"இங்க மற்றவர்கள் பேசற பேச்சுகளை ஒரு காதால கேட்டு, மற்றக் காதால விட்டிடணும். இப்ப இருக்கிறது உமது ஊரப் பிரச்சினைதான். நீர் மறுபடி உமது ஊருக்குப்போகணும். உமது எதிர்காலத்தை நீரே தீர்மானிக்கணும். இங்க சிக்கலில மாட்டிக்காம ஜாக்கிரதையா நடந்துக்கணும்".

சிதம்பரம் இன்று தங்கள் இருப்பிடத்திற்கு அழைத்துக் கொண்டு போனார். "வாப்பா, வந்து உக்காரு." சிதம்பரத்தின் அம்மா அன்பாக வரவேற்றார். சிதம்பரத்தின் தங்கையும், மூன்று சகோதரிகளும் என்னைப் பார்த்துப் புன்னகைத்தார்கள். சிதம்பரம் என்னைப் பற்றி, அவர்களுக்குச் சொன்னார்.

"கஷ்டம்தானேப்பா. வீட்ட விட்டுத் தனியா வந்து..."

பிரச்சினை தீர்ந்துவிடும் என்று தானே நியூஸ் வருது.

சாப்பிடச் சொன்னார்கள்.

"இன்னும் கொஞ்சம் சாதம் போட்டுக்குங்க. மீனாட்சி தயிர் விடு".

"வேண்டாம். நான் தயிர் சாப்பிடுகிறதில்லை".

"என்ன? தயிர் சாப்பிடறதில்லையா? அதான் ஒல்லிக் குச்சியாட்டம் ஒடம்பு. நல்லாச் சாப்பிடணும்".

சிதம்பரத்தின் அம்மா சாப்பாடு போட்டபடி, அன்பை அதிகம் பரிமாறினார்.

இப்படித் தொடங்கிய நட்பினால் வெளியே போவது அதிகம் தடைப்பட்டது. பின்னேரம் ஆறு மணியானதும் அவர்கள் வீடு செல்வது, ரீவி பார்ப்பது, பேப்பர் படிப்பது என்று பொழுதுபோனது. சிதம்பரத்தின் அப்பா சிலநாட்களுள் 'டா' போட்டு அழைக்கத் தொடங்கினார். அவ்வளவு உரிமையுடன் என்னுடன் பழகினார்கள். ஆரம்பத்தில் என் பேச்சு அவர்களுக்கு விளங்காமல் இருந்தது.

"என்ன இவர் பேசறது ஒண்ணுமே புரியலை".

சிதம்பரத்தின் சகோதரிகள் விழித்தனர்.

கொஞ்சம் பொறுமையாக, நிதானமாகப் பேசுங்க என்று கிண்டல் செய்தார்கள். இடையிடையே சிதம்பரத்தின் வீட்டுச் சாப்பாட்டால், வயிறு நிரம்பியது.

நான், இவர்களோடு இப்படிப் பழகுவது பிளாட்டில் இருந்த மற்றவர்களுக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணியது.

ஒபிஸ் பையன் சொன்னான் பஸ் அடிபட்டு விட்டதென்றும் அதில் வந்த சில பயணிகளுக்குக் காயம் என்றும், பஸ் விழுப்புரத்திற்கு அப்பால் லொறியுடன் மோதிவிட்டது. பஸ்ஸின் முகப்பும், வலது பக்கமும் சேதமானதோடு, முகப்புக் கண்ணாடிகளையும் மாற்றவேண்டும் என்றார்கள். உடைந்த கண்ணாடியோடு, உடையும் நிலையிலுள்ள மற்றைய கண்ணாடிகளையும் மாற்றிவிட்டால், வேலை முழுமையாக முடிந்துவிடும் என்றும் சொன்னார்கள். இதனால், மதுரைக்குப்போக வேண்டியநிலை எனக்கு ஏற்பட்டது. அங்கேதான் நல்ல கண்ணாடிகள் குறைந்த விலைக்குக் கிடைக்கும். இங்கே மூன்று நாட்கள் கழிந்துவிட்டன.

அன்று மாலை புறப்படலாம் என்று தீர்மானித்தேன். மற்ற பஸ்ஸில் வேலை முடிந்து, ஓய்வாக இருக்கும் வெங்கிட்டையும் அழைத்துக்கொண்டு போகலாம்.

இரவு மதுரைக்குப் போகும் பஸ்ஸில், இரண்டு டிக்கற்புக் பண்ண வெங்கிட்டிடம் சொன்னேன். இரவு வரும் வழியில், கிருஷ்ணவேணித் தியேட்டருக்கு அருகிலுள்ள துணை பஸ், ஒப்சில் நின்று ஏறுவதாக வெங்கிட்டுவிடம் சொல்லிவிட்டுத் திருநகர் வந்துவிட்டேன்.

சிதம்பரத்திடம் சொல்லியாக வேண்டும். வீட்டிலோ என் பதட்டத்தைக் கண்ட சிதம்பரத்தின் அம்மா - என்னவென்று விசாரித்தார். விடயத்தைச் சொன்னேன்.

"ரொம்பக் கஷ்டமே!" என்று கவலைப்பட்டார். மதுரைக்குப் போகும் விடயத்தைக் கூறிமுடிக்கவும், சிதம்பரம் வந்துவிட்டார்.

"எத்தனை மணிக்குக் கிளம்புற"

சிதம்பரத்தின் அம்மா கேட்டார்.

"இரவு 10 மணிக்கு மேலத்தான் பஸ் வரும். இங்கே ஏறிவிடலாம், பிரச்சினை இல்லை."

"சரி இரவு 9 மணிக்கு இங்க வாரும். நானும் பாட்டி வீட்டை போய் வந்திடறேன்" சிதம்பரம் சொன்னார்.

"இங்கேயே சாப்பிடலாமே?" சிதம்பரத்தின் அம்மா கேட்டார். மறுக்கமுடியுமா?

இரவு கிருஷ்ணவேணித் தியேட்டரிலிருந்து படம் முடியச் சனங்கள் கும்பலாக வெளியே வந்துகொண்டிருந்திருந்தார்கள். 'பாசமலர்' பழைய சிவாஜியின் படம். பழையபடம் என்றாலும், கூட்டத்திற்குக் குறைவில்லை.

"முரளி! எப்பவருவீர்?" சிதம்பரம் கேட்டார்.

"வேலை எப்பமுடியுமோ தெரியாது. வேலை முடிஞ்சவுடன் வந்துடுவன்".

"அங்க நிக்கலாம்தானே?"

"இல்லை".

"ஏன் ஏதாவது பிரச்சினையோ?"

அந்த விடயம் நினைவுக்கு வந்தது. சிதம்பரத்திடம் நான் அதைப்பற்றிக் கதைக்கவில்லை. ஏதாவது சிக்கலில் மாட்டுப்பட்டு விடுவேனோ? இவ்வளவு கவலையீனமாக இருக்கிறேன்.

"என்ன பேச்சைக் காணோம்?"

"உம்மிடம் சொல்லவேண்டுமெண்டு நினைச்சன். இப்போ ஞாபகப்படுத்திப் போட்டீர். நான் வரும்போது, பாஸ்போட்டில்-உல்லாசப்பயணம் ஒருமாதமெண்டு விஸா எடுத்து வந்தனான். இப்ப எல்லாம் முடிஞ்சு கனகாலம் போட்டுது. ஏதோ எங்கட ஆட்கள் இருக்கினம் எண்ட தைரியத்தில் இருந்தாலும், பயம் இருக்கத்தான் செய்யுது. அகதியாகப் படகில வந்த சனத்துக்கு - அகதிக்காட் இருக்கு. பிரச்சினை இல்லை. எனக்கு ஒண்டுமில்லை. நாளைக்கு ஏதேனும் பிரச்சினை நடந்தா, தூக்கிக்கொண்டு போய்விடுவாங்கள். அதுதான் லொட்ஜில கனநாளைக்குத் தங்கிறது பிரச்சினை. உடனே வரவேணும்".

கொஞ்சநேரம் அமைதியாகக் கழிந்தது.

"அவ்வளவு பிரச்சினை வராது முரளி. அப்படி வந்திச்சின்னாலும், சொல்லவேண்டியது - பிரச்சினையில் வந்தேன். இப்பவும் பிரச்சினை தீரவில்லை. அதுதான் திரும்பிப் போகேல்ல என்றுதான். இப்படி நிறையப்பேர் இருக்கிறாங்க, ஒண்ணும் யோசிக்காதேயும்".



மனத்தில பயம் சற்றுக்குறைந்தது போலிருந்தது. இருந்தாலும், நடுக்கம் குறையவில்லை. நேரம் ஒன்பதுக்கு மேலாகிவிட்டது. இன்னமுன் அமளி குறையவில்லை. என்ன ஆரவாரம்! என்ன துள்ளல்! இரண்டாவது காட்சிக்கு சனம் மொய்துக்கொண்டிருப்பது தெரிந்தது. சற்றுக் கவலையுடன் மெல்லியதாகச் சிரித்தேன். ஊர் நினைவு வந்துவிட்டது.

"இல்ல இந்த நேரத்திலை எங்கட ஊர்ப்பக்கம் எப்படி இருக்கும்? நாய்கள் குரைத்துக் கொண்டிருக்கும். சனங்களெல்லாம் அகதியாகப் போனபிண்பு, நாய்களுக்கு உணவில்லை. விசர் பிடிச்சு அலைஞ்சுகொண்டிருக்கும். கனபேர் நாய் கடிச்சே செத்திருக்கினம். ஒரே இருட்டுத்தான். வீட்டுக்குள்ள குத்துவிளக்கு, கைவிளக்கு இருக்கும். ஏதேனும் சத்தம் கேட்டால் - அணைச்சுப்போடுவினம். ஆமி ரோந்து போற சத்தமும்கேட்கும். இடையிடையே குண்டுச்சத்தம் கேட்கும். ஜன்னல்கள் அதிர்ந்துபோகும்".

சிதம்பரம் நான் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

"என்ன சிதம்பரம் சரியாக அறுக்கிறேனா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்ல. இதெல்லாம் கேக்கத்தான் வேணும். நமக்கு எவ்வளவு விசயம் தெரியாம இருக்கு".

பேச்சுவாக்கில் பஸ் வந்ததையும் கவனிக்கவில்லை.

வெங்கிட்டு ஏற ஓடிவந்தான். பஸ் சில பயணிகளை ஏற்றிக் கிளம்ப, நான் - சிதம்பரத்துக்குக் கை அசைத்து, விடைபெற்றேன். பின் வெங்கிட்டுவும், நானும் அருகருகே அமர்ந்துகொண்டோம்.

வெங்கிட்டுவைப் பற்றியும் சொல்லவேண்டும். எங்கள் பஸ்ஸில் கொன்டக்டர் வேலை செய்துகொண்டிருந்தான். துணிச்சல்க்காரன். நாமக்கல்லிலே குஞ்சிப்பாளையம் சொந்தவூர். பஸ்ஸில் வேலைமுடிந்து ஓய்விலிருக்கும்போது, ஊருக்குப் போய்விடுவான். ஒருமுறை என்னையும் அழைத்துக்கொண்டு போய், ஊர்க்கோழி சமைத்துப்போட்டான். நன்றாகவிருந்தது. என்னுடைய நிலையைக் கொஞ்சம் புரிந்தவன். நான் சில விடயங்களில் தயக்கம் காட்டும் போது, 'ஏன் சார் பயந்து சாகிறீங்க' என்பான்.

பஸ் போய்க்கொண்டிருந்தது. பயணிகள் - படம் பார்த்துக் கொண்டிருந்தனர். கடும் குளிர்காற்று ஜன்னலூடாக உள்ளே அடித்தது. சாரிசாரியாக வாகனங்கள் போய்க் கொண்டிருந்தன.

"எப்பசார் ஊருக்குப் போறீங்க? இங்க வந்ததுக்கப்புறம் நீங்க - ஊருக்குப் போகல்லதானே?"

"போகத்தான் வேணும். இன்னும் சரியான நேரம் வரேல்ல" விழுப்புரத்தில் பஸ் ஓய்ந்து நின்றது.

"சார் சாப்பிடலாமா?"

"நான் சாப்பிட்டுத்தான் வந்தேன். நீர் சாப்பிட்டுவிட்டு வாரும்".

வெங்கிட்டுவிடம் சொல்லியபடி பணத்தைக் கொடுத்து அனுப்பினேன்.

(தொடரும்)

# உன்னோடு நாமும்



உன்னோடு
சிரித்துக் கும்மாளமிட்ட
அந்த நாட்களை
நினைத்துப் பார்க்கின்றோம்.
நீயும் சிரித்து ...
நம்மையும் சிரிக்க வைத்து...
நீ எங்கு சென்றாலும்
உன்னைச் சுற்றிலும்
ஒரு கூட்டம்
இருந்து கொண்டேயிருக்கும்.
உன்னுடன்
அளவளாவுவது என்றால்
எல்லோருக்குமே பிரியம்.
உன்னுடைய
பால் முகத்தில்
அந்த மலர்ச்சிரிப்பு
அனைவரையுமே கிறங்கடித்துவிடும்.
நண்பனே!
உன்னால் எப்படியடா
சிரித்துக்கொண்டே
இறக்கவும் முடிந்தது?
நீ சொல்வாய்
இறக்கும் போது எதையும்
கொண்டு செல்வதில்லையென்று
நீ போனபின்தான் தெரிந்தது
நம்முடைய இதயங்களையும்
எடுத்துச் சென்றுவிட்டாயென்பதை.

அ.சூரியன்

# நூல் அகம்

## தமிழீழம் தந்த தாமோதரனார்




யாழ்ப்பாணம் - சிறுப்பிட்டியைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை என்னும் தமிழ் அறிஞர் பற்றிய நூல் - தமிழீழம் தந்த தாமோதரனார் - சென்னைக் கிறிஸ்தவக்கல்லூரி தமிழ்த்துறை முனைவர் கு.அரசேந்திரன் என்பவரால் எழுதப்பட்டுள்ளது.

ஏற்கனவே பல நூல்கள் தாமோதரம்பிள்ளை பற்றி வெளிவந்திருக்கின்றன.

தமிழ்த்துறையின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சி.சிவலிங்கராஜா, வருகை விரிவுரையாளர் மனோன்மணி சண்முகதாஸ் போன்றோர் தாமோ தரம்பிள்ளை பற்றி நூல்களை எழுதியுள்ளனர்.

ஈழத்தமிழறிஞர் ஒருவர் பற்றி - ஈழத்தவர்களால் எழுதப்பட்ட நூல்களாக அவை காணப்படுகின்றன. ஆனால், ஈழத தறிஞர் பற்றி தமிழகத்து அறிஞர் ஒருவரால் எழுதப்பட்ட சிறப்பிற்குரியதாக இந்நூல் விளங்குகின்றது.

நூலாசிரியர் - தனது நூலினை மூன்று அலகுகளாகப் பிரித்து, தாமோதரனார் பற்றி எழுதியுள்ளார்.

தமிழ்ப் பதிப்பின் தலைமகன் என்பது முதலாவது பிரிவு, பதிப்புச் செம்மல் உ.வே.சா. அவர்களின் வழிகாட்டி என்பது இரண்டாவது பிரிவு, தமிழ்மானம் கனன்ற தனிப்பேர் அரிமா என்பது மூன்றாவது பிரிவு. இம்மூன்று பிரிவுகளிலும், 56 பக்கங்களில் தமிழீழம் தந்த தாமோதரனாரை, ஆசிரியர் சுருக்கமான முறையில் தந்துள்ளார்.

தமிழ்ப் பதிப்பின் தலைமகன் என்ற பிரிவில் பதிப்புத் துறையில் நாவலர் செய்த பணிகள், அவர் பணியைத் தொடர்ந்து தாமோதரம்பிள்ளையின் வாழ்வு அமைந்த தன்மையை எடுத்துக்காட்டியுள்ளனர்.

தாமோதரனின் கல்வியும் பணியும், பதிப்பித்த நூல்களும் அவற்றின் அருமைப்பாடும், தமிழ்ப்பற்றே அவரின் பதிப்புப் பணிக்கு அடிப்படையாக அமைந்த தன்மையும், பதிப்புப் பணியையே பிறவிப்பயனாகக் கொண்டு உழைத்தவர் தாமோதரம்பிள்ளை என்பதும், பதிப்பு முயற்சியில் ஏடுகளைத்தேடி அவர்பட்ட இன்னல்களும், நூல்களைப் பதிக்கும் போது, அவர்பட்ட துன்பங்களும் விபரிக்கப்படுகின்றன.

இவ்வாறான விபரிப்புக்களில் இறுதிமுடிவாக 'தாமோதரனார் உழைத்தது தமிழை நிலைநிறுத்த உழைத்த உழைப்பு'. ஆதலால், அவர் தமிழுள்ள அளவும் நிலை நிற்பார். தமிழ்ப் பதிப்பின் தலைமகன் என்ற பெருமை என்றும் அவருக்கு உண்டு என்று நூலாசிரியர் உரைக்கின்றார்.

தாமோதரம்பிள்ளை பற்றி உ.வே.சா. 'என்சரித்திரம்' என்ற நூலில் குறிப்பிட்ட கருத்துக்களுக்கு - பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, ஆ.வேலுப்பிள்ளை ஆகியோர் வருத்தம் தெரிவித்தமையும், தாமோதரம்பிள்ளை பற்றி என் சரித்திரத்தில் இடம்பெற்ற செய்திக்கான சரியான விளக்கமும் இந்நூலில் இடம்பெறுகின்றது.

தமிழுலகில் நின்று, தமிழின் மேல் சமஸ்கிருதவாணர் தொடுத்த போரை மறைமலை அடிகள், மனோன்மணியம் சுந்தரனார், பாவாணர் போன்றோர் எதிர்த்து வந்தனர். பல்லாண்டு காலத்துக்கு முன்பே நம் தாமோதரனார் தன்னந் தனியனாக நின்று, தமிழைத் தாங்கும் வலிய தூணாகத் திகழ்ந்து, தமிழ்ப் போர் நிகழ்த்தியுள்ளார். 'தமிழ் மானம் காத்த தனிப்பேர் அரிமா'வாகித் திகழ்ந்துள்ளார் என, மூன்றாம் பிரிவில் ஆசிரியர் கூறியுள்ளார்.

தாமோதரம்பிள்ளை மீது கொண்டிருந்த உணர்வினை விளக்கும் முகமாக, இந்நூல் எழுதப்பட்டுள்ளதாக ஆசிரியரே தனது முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

இந்தச் சிறுநூலை கற்கின்ற தமிழ் நெஞ்சங்களுக்குத் தாமோதரனார் பற்றிய என் உணர்வு தோன்றும் என்பது, என் நம்பிக்கை. இது ஆசிரியரின் சான்றாக அமைகின்றது.

பூ.நகுலன்

# கிழக்கும் மேற்கும்

## மூன்றாம் செழியன் - செல்வி நைற்றிங்கேல்



காயமடைந்த போர்வீரர் - எவராலும்
தேடுவாரின்றி களத்தினிற் கிடந்தனர்!
சிகிச்சை அளித்திட வேண்டு மளவிற்கு
வைத்திய வசதிகள் இருக்கவுமில்லை!!
வீரர்களுக்கு நிலா வெளிச்சத்தினிலும்
வைத்தியர் சிகிச்சை அளித்து வந்தனர்!
இங்கிலாந்தில் வசித்த செல்வி நைற்றிங்கேல்
இதையறிந்து இதயம் நொந்தார்!
அவலத்தைப் போக்க அன்றே துணிந்தார்!
துணிவுடன் திறமையும் தியாகமும் மிகுந்த
அரிவையர் அணியொன்றைச் செல்வி நைற்றிங்கேல்
அமைத்த வேளையில் களநிலை மிகச் சீர்கெடவே
செல்வியின் தலைமையில் முப்பத்தொன்பது பேர்
கொண்ட குழுவொன்று - பேரலை புயலென்று
இன்னல் மிகுந்த கடற்பய ணத்தின்பின்
போர்க்கள மடைந்து பேரதிர்வடைந்தது!
அழுக்குகள் நிறைந்த அசுத்தங்கள் மலிந்த
கட்டட மொன்றே வைத்திய சாலையாம்!
காயமடைந்தோர் அழுக்கு நிலத்தினில்!
காயமடைந்த வீரரின் உடைகளோ
இரத்தக் கறையுடன் துர்நாற் றமும்தான்!
மாற்றுடையின்றியும் கவனிப்பா ரின்றியும்
காயமடைந்தோர் கிடந்து வருந்தினர்!
களத்துள்ள வைத்தியர் குழுவினர் -முதலில்
செல்வியின் அணியின் வருகையை எதிர்த்தனர்!
செல்வியின் அணியும் பணியின்றி இருந்தனர்!
துன்ப நிலையையும் துயர ஓலங்களையும்
சமாளிக்க இயலாத வைத்திய குழுவினர்
செல்வியின் உதவியை நாடினர் இறுதியில்!
தேடுவாரின்றிக் கிடந்தபோர் வீரரைச்
சுத்தம் செய்து உடைகள் மாற்றி
மெத்தையிற் கிடத்தியோர் வைத்தியசாலையில்
துர்நாற்றம் வீசிய சூழலை மாற்றினர்!
தூய்மையை வளர்த்து அழகும் செய்தனர்!
போர்வீரர் களுக்குச் சுத்தமும் சுவையும்
போஷாக்கும் நிறைந்த உணவுகள் வழங்கினர்!
செல்வியின் சேவையின் மேன்மையை அறிந்து
மேன்மை தங்கிய விக்டோரியா ராணியே
செல்வியை வாழ்த்தியும் சேவையைப் போற்றியும்
மடலொன்றை வரைந்து செல்விக் கனுப்பினார்!
ஒவ்வொரு நாளும் இரவுப் படுக்கைக்குத்
தாம்செல்லும் முன்னர் வைத்திய சாலையின்
ஒவ்வோர் அறைக்கும் கையிலோர் விளக்குடன்
சென்றங்குள்ள ஒவ்வொரு நோயாளியையும்
கவனமாய்ப் பார்ப்பார்!குறைகளைக் கேட்பார்!
காய்ச்சலின் வேகத்தில் முனகும் நோயாளிக்கு
மருந்திட்டுத் தடவி ஆறுதல் கூறுவார்!
மனத் துணைவோடு புரண்டுகொண்டிருப்பவர்க்கு
இதமான வார்த்தையால் தேறுதல் கூறுவார்!
அன்பு மிகுந்த அவரின் பணியினாலும்
அன்புமிகுந்த அவரின் பேச்சினாலும்
ஆவலாய்த் தேடுவர் நோயாளர் - செல்வியை!
நோயாளர்களுக்கு ஓய்வில்லாச் சேவையால்
நோயின் பிடிக்குள் சிக்கினார் செல்வி!

(தொடரும்)

முருகு

# அவளுக்கான தியாகங்கள்



ஈழத்தலைகளை இலங்கைக் கழுகுகள்
குட்டிப் பார்த்தன.
எம் தலைகள் குட்டக் குட்ட குனிந்திருந்தால்
அப்போதே நாம் முற்றுமுழுதாக
நிம்மதியைத் தொலைத்திருப்போம்.
நாம் சிற்சில எதிர்ப்புகளைக்
காட்டியதனாலே குட்டுபவர்களும்
சிந்திக்கத் தொடங்கினார்கள்.
ஏன்!; குட்டவே பயப்பட்டார்கள்.
நீண்ட கால விடிவுப் பயணத்தில் நெருப்பாற்றில் கூட
நீச்சலடித்துள்ளோம்.
விடிவிற்காய் தலைகளும்
கொடுக்கப்பட்டிருக்கிறது.
அடங்கி வாழும் வாழ்வை நாம்
அடியோடு வெறுக்கிறோம்.
நாம் விடும் மூச்சுக் காற்றுக் கூட
எங்களுக்குச் சொந்தமில்லை யென்ற நிலை
இருந்திருக்கிறது.
இதையும் தாண்டி தியாகங்கள்
தொடர்ந்திருக்கின்றன.
நம் தியாகங்கள் யாவும்
ஈழத்தாய்க்காகவே நிகழ்ந்திருக்கிறது.
தாயின் விழியினில் நீர்வழிவதை
நாம் அனுமதிக்கப் போவதில்லை.
அவளின் விடிவிற்காய் தியாகங்கள் செய்யக் கூட இன்னும்
நாம் தயாரான நிலையிலே...
இருக்கின்றோம்.

கி.அ.தில்லைதாசன்

# கவிதைச் சோலை

## மரநிலை

இந்த மரங்கள் இடம்பெயர்ந்து எம்மைப்போல்
சந்திக்குச் செல்வதற்கும்,
தன்பாட்டிற் போவதற்கும்
எண்ணியெண்ணி ஏங்கினவோ.. எவருக்குந் தெரியாது.
நின்ற இடத்தினிலே நின்று கால்
உழைந்தாலும்
குந்தி இருப்பதற்குக் கொடுத்து வைக்க முடியாத...
காற்றுவராப் போது
காற்றாட முடியாமல்
ஊற்றுகிற வெய்யிலிலே உலர்ந்து தகிக்கின்ற ....
மழைநாளில் மட்டும்
மணியாய்க் குளித்தடுத்த
மழைமட்டும் ஊத்தை அகலா திருக்கின்ற ...
தன் இலை அசைப்பதற்கும்
காற்றையெதிர் பார்க்கின்ற ....
என்ன உணர்வுக்கும் இலையைமட்டும் ஆட்டியாட்டித்
துன்பத்தை இன்பத்தைச்
சொல்லுதற்கும் நாதியற்ற ...
குண்டு விழுந்தாலும் குடிபெயரத் தெரியாத...
நின்றபடி காயம் பட்டு வதைக்கிற...
யார் பூப்பறித்தாலும்,
யார் கிளை முறித்தாலும்,
யார் வேர் அறுத்தாலும் எதிர்ப்பெதுவுங் காட்டாமல்
பேசா மடந்தையாய் வலிசுமந்து வீழுகிற...
இந்த மரங்களது;
எழிலை மட்டும் இரசித்தபடி
சந்தோஷப் பட்டோமே!
அவற்றின் குறை, துயரை
எந்தக் கவிவரியில் இத்தனை நாள் பதிவு செய்தோம்?

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்*
*மக்கட்பண்பு இல்லா தவர்.*

*திருக்குறள்.*

# நமது நோக்கு

## புரிந்து கொள்ளுமா ஜே.வி.பி.

இடைக்கால நிர்வாகம் என்ற பெயரில் அரசாங்கம் புலிகளுக்குத் தனிநாட்டை வழங்கப்போவதாக மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டிருப்பதில் ஜே.வி.பி.யினருக்கு அப்படியென்ன அலாதியான பிரியமோ தெரியவில்லை.

ஜே.வி.பி.யின் பிரச்சாரப் பீரங்கி விமல் வீரவன்ச, பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோர் இத்தகைய பிரச்சாரங்களில் முன்னணியில் இருந்து வருகின்றனர். இவர்களின் பிரச்சாரங்களின் நோக்கம் எல்லாம், புலிகள் - அரசு சமாதானப் பேச்சுவார்த்தையைக் குழப்புதல், அரசாங்கத்தை வீழ்த்திப் புதிய ஆட்சியை நிறுவுதல் ஆகியனவேயாகும்.

நாட்டைப் பாதுகாத்தல், தேசிய ஒருமைப்பாடு ஆகிய பெயர்களால் ஜே.வி.பி வளர்த்துவரும் பேரினவாதச் சிந்தனைகள், மிகவும் மோசமான கட்டத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது.

இனரீதியான மோதல்களுக்கு வழியேற்படுத்திக் கொடுப்பதாகவும், குழப்பங்களை ஏற்படுத்துவதாகவுமே இத்தகைய கருத்துக்கள் அமைந்திருக்கின்றன.

புலிகளுக்கும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் சமர்ப்பிக்கப்பட்ட திட்டவரைபுகளில், வேறுபாடு இருப்பதான குற்றச்சாட்டுக்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதிலளித்துவிட்டபோதும், ஜே.வி.பி தொடர்ந்தும் அதே பிரச்சாரத்தினை முன்னெடுத்து வருகின்றது.

அத்துடன் - இடைக்கால நிர்வாகசபை மூலமாக- தமிழீழம், இலங்கைத் தேசம் என்று, இலங்கை இரண்டு நாடுகளாகத் துண்டாடப்படவுள்ளதாக, விமல் வீரவன்ச தெரிவித்திருக்கிறார்.

ஜே.வி.பி.யினரைப் பொறுத்தவரையில் இத்தகைய தேசப்பற்றுமிக்க கருத்துக்களைக் கூறுவதன் மூலமாக மக்களை இலகுவாக ஏமாற்றிவிடலாம் எனக் கருதுகின்றனர் போலத் தெரிகின்றது.

கடந்த காலத்தில் - ஜே.வி.பி இரண்டு ஆயுதக் கிளர்ச்சிகளை நடத்தி, அது தோல்வியில் முடிந்த பின்னரே அரசியல் பாதைக்கு வந்துள்ளது.

ஜனநாயக மொழிநடையில் சொல்லப்போனால் - மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கங்களையே கவிழ்த்து ஆட்சியைப் பிடிக்க ஜே.வி.பி எத்தனித்தது. அது தேசத்துரோகக் குற்றச்சாட்டுக்குள் அடங்கவில்லையென ஜே.வி.பி எப்படிக் கருதுகின்றதோ தெரியவில்லை.

ஜே.வி.பி.யின் இரண்டு ஆயுதக் கிளர்ச்சிகளும் தோல்வி கண்டதன் விளைவுகளால்தான் - ஜே.வி.பி இன்று அரசியல் நடத்துகின்றது. இதே ஜே.வி.பி, இடைக்கால நிர்வாகசபை நாட்டைத் துண்டாடும் என்று நியாயம் பேசிக்கொண்டிருக்கின்றது.

நாட்டின் அரசாங்கத்தையே மாற்றியமைக்க ஆயுதக் கிளர்ச்சி செய்யலாம், அது தோல்வி கண்டால் - எந்த அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனரோ, அதே அரசில் பொதுமன்னிப்பை பெற்றுக்கொண்டு அரசியல் நடத்தலாம் என்றால்,

ஒரு இன மக்களின் சார்பில் விடுதலைப் போராட்டத்தை நடத்தி - கௌரவமான சமாதானத்தின் மூலம் அரசியல் தீர்வு ஓரளவு காண்பதில், ஒருபடியான இடைக்கால நிர்வாகத்தைப் புலிகள் பெறுவது மட்டும் எப்படி அநியாயமாகும்? இது ஜே.வி.பி.யினரின் முன் எழுப்பப்படவேண்டிய கேள்வி.

இப்படியொரு கேள்வி, ஜே.வி.பி.யினரிடம் எழுப்பப்பட்டால், அதுகுறித்துப் பதிலளிக்க அவர்களிடம் எந்தப் பதிலும் இருக்கமுடியாது.

இன்னொரு விடயம் என்னவென்றால், இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளிடம் கையளிப்பதன் மூலம் - நாடு இரண்டாகப் பிரியும் என்று ஜே.வி.பி.யினர் கூறுவதில் உண்மையில் அர்த்தம் இருக்கிறதா, என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

ஜே.வி.பி.யினர் கூறுவது போல, பிரச்சினை நாடு பிரியுமா, இல்லையா என்பதல்ல. இடைக்கால நிர்வாகம் புலிகளிடம் கையளிக்கப்படுவதே இவர்களின் பிரச்சினையாக இருக்கின்றது.

புலிகள் சமாதானப் பேச்சுக்களுக்கு வராவிட்டால்- நாட்டை பிளவுபடுத்தும் நிலையில் இருந்து பாதுகாக்கும் திராணி ஜே.வி.பி. பெற்றிருக்கிறதா?

எல்லாவகையான படையெடுப்புக்களையும் புலிகள் மீது மேற்கொண்டு, தோல்விகண்ட பின்னரே அரசாங்கம் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கு முன்வந்தது.

போரில் இராணுவத்தினர் களைப்படைந்த பின்னர்தான், இனித்தொடர்ந்து போரிடுவது ஆபத்தானதென உணர்ந்த அரசு - புலிகளுடன் பேச்சில் ஈடுபட்டது.

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படாதுவிட்டால், புலிகள் நடத்திவந்த தாக்குதல்களின் வேகத்தைச் சற்றுவேகப்படுத்தியிருந்தால், இந்தளவுக்கும் நிலைமை எங்கேயோ போயிருக்கும் எனச்சொல்ல வேண்டியதில்லை.

இதைவிட - புலிகள் இனிமேல்தான்தனிநாட்டை உருவாக்க வேண்டும் என்றோ, அதற்கு இடைக்கால நிர்வாகம் தேவையென்றோ கூறமுடியாது.

புலிகள் எப்போதோ தனிநாட்டுக்கான, கட்டமைப்புக்களை உருவாக்கத் தொடங்கிவிட்டனர். எனவே ஜே.வி.பி இத்தகைய அர்த்தமற்ற கருத்துக்களை வெளியிடாமல் நடந்து கொள்வதே புத்திசாலித்தனமாக இருக்கும்.

# இவ்வருடம் மாவட்டங்கள் தோறும் சிறுவர் விளையாட்டுப் போட்டிகள்!

### ஒத்துழைப்புக் கோருகிறார் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா

(மட்டக்களப்பு)

இதுவரை காலமும் எமது சிறுவர்கள் எம்மீது திணிக்கப்பட்ட யுத்தத்தையும், பொருளாதாரத் தடையின் நெருக்கடிகளையுமே அனுபவித்தனர். அவர்களின் உடல், உள திறன்களை வளர்ப்பதற்கு உதவுவதும், ஒவ்வொருவரினதும் கடமையாகிறது. அந்தவகையில், இவ்வருடம் மாவட்டங்கள் தோறும் நடத்துவதற்குத் திட்டமிட்ட சிறுவர் விளையாட்டுப் போட்டிகளைச் சிறப்புடன் நடத்துவதற்கு அனைவரையும் ஒத்துழைக்கும்படி, தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் மாவட்டங்கள் தோறும் சிறுவர்களுக்கான போட்டிகள் நடைபெற்று, ஒக்ரோபர் முதல் வாரத்தில் மட்டக்களப்பில் தமிழர் தாயகத்தை உள்ளடக்கிய அனைத்து மாவட்டங்களின் தெரிவு அணியும், வீரர்களுக்கான தேசிய விளையாட்டு விழா நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்போட்டிகளில் ஒன்பது வயதுப் பிரிவினருக்குரிய போட்டிகளும், பன்னிரண்டு வயது பிரிவினருககுரிய போட்டிகளும், பதின்மூன்று வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டியும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால், தேசிய மட்டப் போட்டிகள் - தமிழீழ விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ளது. இவை தொடர்பான விபரங்களை, தமிழீழ விளையாட்டுத்துறையின் மாவட்டப் பொறுப்பாளர்களினூடு பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கூட்டுறவுத்துறை வேகமாகச் செயற்பட்டால் ஒருபோதுமே நட்டம் ஏற்படச் சாத்தியமில்லை!

### நிர்வாகசேவை துணைப்பொறுப்பாளர் இளஞ்சேரன்

கூட்டுறவுச் சங்கங்கள் நட்டத்தில் இயங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் ஒரு போதுமே இல்லை. உண்மையிலேயே கூட்டுறவுத்துறை வேகமான செற்பாட்டையும் முழுமையான வளர்ச்சியையும் கொண்டிருக்குமானால், நட்டத்திலேயே இயங்கும்நிலை நிச்சயமாக மாற்றமடையும், இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ நிர்வாக சேவைத் துணைப்பொறுப்பாளர் இளஞ்சேரன்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 81 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழாவிலே பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, .அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

இன்றைய சமாதான காலத்தின்போது, தனியார்துறை நிறுவனங்களின் வரவும், வளர்ச்சியும், வேகமான செயற்பாடும் எமது தமிழீழத்தின் - யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலேயே அதிகரித்துள்ளது.

தனியார்துறையைப் பொறுத்தவரையில், அவர்களே தமது பொருட்களின் விலைகளை நிர்ணயம்செய்து தரம், கேள்வி என்பவற்றை வைத்து, விலைகளைக் கூட்டிக் குறைக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

தனியார்துறையோடு போட்டிபோட வேண்டுமாக இருந்தால், கூட்டுறவுச் சங்கங்களும், கூட்டுறவாளர்களும் ஒன்றாக இணைந்து பணியாற்றவேண்டும். இன்று கூட்டுறவுத்துறையைப் பொறுத்தவரையில், ஒரு சில முகாமையாளர்களும், ஊழியர்களும் விடும் தவறுகளினால் - ஒட்டுமொத்த கூட்டுறவுச் சமூகத்தையுமே தவறான கருத்துக்கொண்டு பார்க்கும்நிலை உருவாகியுள்ளது. இந்தநிலை மாற்றப்படவேண்டும். கூட்டுறவாளர்கள் சேவையை நோக்காகக் கொள்ளவேண்டும்.

மக்களிடையே தேவைகளை அறிந்தே செயற்படவேண்டும். உதாரணமாக - எமது மக்கள் காலை 8.30 மணிக்கு வேலைக்குச் சென்று, மாலை 5 மணிக்கே திரும்புகிறார்கள். எனவே, அவர்களால் கூட்டுறவுக்கடைகளைப் பயன்படுத்த முடிவதில்லை. எனவே, நேரங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதன்மூலம், அதிக இலாபத்தினைப் பெறமுடியும். அதன்மூலம், ஊழியர்களின் வேதனமும் அதிகரிக்கப்படலாம் எனத் தெரிவித்தார்.

# புலமையாளர் அறிமுகமும் புத்தகக் கண்காட்சியும்!

கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்ற ஏற்பாட்டில் - புலமையாளர் அறிமுகமும், கௌரவிப்பும், ஊக்குவிப்பும், புத்தகக் கண்காட்சி மற்றும் விற்பனையும் எதிர்வரும் வியாழக்கிழமையிலிருந்து சனிக்கிழமை வரை மு.ப. 9.30 மணிமுதல் நடைபெறவிருக்கிறது.

இந்த நிகழ்ச்சி - நெல்லை முருகன் திருமண மண்டபத்தில த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் - சிறப்பு விருந்தினர்களாக சி.இளம்பரிதி, கவிஞர் புதுவை இரத்தினதுரை, பொ.புஸ்பகுமார் ஆகியோர் கலந்துகொள்வர்.

# நான்காயிரத்து ஐந்நூறு குடும்பங்கள் வவுனியா பகுதியில் மீளக்குடியமர்வு

### அரச அதிபர் தகவல்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின், 4500 குடும்பங்கள் மீளக்குடியேறியுள்ளனர் என வவுனியா மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

இன்னும் பல குடும்பங்கள் மீளக்குடியேற விருப்பம் தெரிவித்துள்ளபோதிலும், சில கிராமங்களில் பற்றைக் காடுகள் வளர்ந்து காணப்படுவதாகவும், அத்துடன் வீதி புனரமைப்பு, குடிநீர், கல்வி வசதி, சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் அவர் கூறினார்.

மீளக்குடியேறும் மக்களுக்கான அடிப்படை வசதிகளை மேற்கொள்வதற்கு, ஆசிய அபிவிருத்தி வங்கி 30 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

அத்துடன், நியாப் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் 100 குளங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. இவற்றில் 20 குடும்பங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (17)

# கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களை பதிவுசெய்யுமாறு கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தரமாக வசித்து, யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து, புரிந்துணர்வு யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்டபின், மீளக்குடியேறிய 2500 ரூபாவிற்குக் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் - எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் கேட்டுள்ளார்.

இதன் பின்னர், மீளக்குடியமர்த்தல் சம்பந்தமான பதிவுகள் எதுவும் எற்றுக்கொள்ளப்படமாட்டாது எனவும், அவர் அறிவித்துள்ளார்.

இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத தனிநபர் குடும்பங்கள், ஏனைய குடும்பங்கள் - தங்கள் பகுதி கிராம அலுவலருக்கும், ஊரகப் புனர்வாழ்வுக் குழுவுக்கும் விண்ணப்பித்து உரிய படிவங்களை நிரப்பி, குடும்பப் பதிவு அட்டைகளைப் பெற்று, தங்கள் சீவனோபாயக் கொடுப்பனவாக ரூபா 25 ஆயிரத்தைப் பெற்றுக்கொள்ள எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (122)

# யாழ்.நகரிலுள்ள புகையிரத வீதிகளை நில அளவைத் திணைக்களம் அளவீடு

நில அளவைகள் திணைக்களத்தினால், புகையிரத வீதிகள் அளவீடு செய்யப்பட்டு வருகின்றன. அண்மைக்காலமாகச் சொந்தக்காணியற்றவர்களும், புகையிரத வீதிகளில் அருகில் காணிகள் உள்ளவர்களும், புகையிரத வீதியை ஆக்கிரமித்து வருவது அதிகரித்துள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளைப் பெறுவதற்காகப் புகையிரத வீதிகளில் தமக்கான வீடுகளை அமைத்துக் கொள்வோரையும், வியாபார நிலையங்களை அமைப்போரையும் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதற்கட்டமாக - பிரதான புகையிரத வீதியிலிருந்து குருநகர் இறங்குதுறை களஞ்சியத்துக்குப் பிரிந்து செல்லும் புகையிரதப்பாதை, நில அளவையாளர்களால் அளவீடு செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இலங்கையில் புகையிரதப்பாதைகளைச் செப்பனிடும் வேலையை மேற்கொள்வதற்கு, சீன அரசு உதவவுள்ளதாகப் பிரதமரின் சீன விஜயத்தின்போது தெரிவிக்கப்பட்டமையும் இங்கே குறிப்பிடத்தக்கது.

# சதாமின் மகன்களின் அழிவு எங்கிருந்து ஆரம்பமாகியது?

பக்தாத் நகருக்குள் அமெரிக்கப் படைகள் நுழைந்த நேரம் - சர்வ தேச ஊடகங்களும், பென்ரகனும் அமெரிக்கப்படைகள் எங்கெல்லாம்


சதாம்

ஊடுருவுகின்றன என்று மாறிமாறிக் கூறிக்கொண்டிருக்க, ஈராக்கின் தகவற்துறை அமைச்சர் தொலைக் காட்சியில் தோன்றி - "அமெரிக்கப் படைகளா, பக்தாத்துக்குள்ளேயா இருக்கின்றன" என்று முகத்தைக் கண்டிப்பாக வைத்துக் கொண்டு, மணிக்கொரு தடவை கூறிக்கொண்டிருந்தார் - அவர் நின்ற கட்டடத்துக்கு அடுத்த தெருவரை அமெரிக்கப்படைகள் வரும்வரை.

அவர் கூறியதை ஈராக்கிய மக்கள் கூட அப்போது நம்பவில்லை. சமீபத்தில் இன்னுமொரு அறிவிப்பு. இம்முறை அறிவிப்பது ஈராக்கிய தகவற்துறை அமைச்சர் இல்லை, அமெரிக்கா.

மகா ஆச்சரியம் என்னவென்றால் அமெரிக்கா கூறியதை, ஆரம்பத்தில் பலர் நம்பத் தயாராக இல்லை. முக்கியமாக ஈராக்கிற்குள், இந்த அறிவிப்பு என்னவென்றால், சதாம் ஹுசேனின் இரு மகன்களும் கொல்லப்பட்டார்கள் என்ற அறிவிப்பாகும்.

கடைசியில் அமெரிக்கா நம்பாதவர்களை நம்பவைப்பதற்காக இறந்து போனவர்களின் புகைப்படங்களை வெளியிடவேண்டியிருந்தது. ஊடகங்களில் வெளியாகிய அமெரிக்கா கொடுத்த புகைப்படங்களையும், இது கிராபிக்ஸ் வேலையா என்று ஆளாளுக்கு கேட்கத் தொடங்க, அமெரிக்கா வேறுவழியில்லாமல் ஊடகவியலாளர்களை நேரடியாக அழைத்துப் போய் இறந்தவர்களின் உடல்களைக் காட்டி, அவர்களையே விடியோ எடுத்துக்கொள்ளச் சொன்ன பின்னர் தான் பலர் நம்பத் தொடங்கினார்கள்.

இறந்துபோனது சதாமின் மகன்கள்தான் என்று நம்பப்பட்ட பின்னர், எழுப்பப்பட்ட கேள்விகள் - இவர்கள் எப்படிக் கொல்லப்பட்டார்கள்? அமெரிக்காவின் கைகளில் எப்படி மாட்டிக் கொண்டார்கள்? அல்லது ஏன் மாட்டிக்கொண்டார்கள்? போன்றனவாகும்.

சதாம் ஹுசேனின் இரு மகன்களும் கொல்லப்பட்டது பலா மாவட்டத்திலுள்ள மோசொல் என்ற இடத்தில்


ஹுசே


உதே

என்பதை அறிந்திருப்பீர்கள். அமெரிக்கா - ஈராக்கிற்குள் நுழைந்ததில் இருந்து இது பற்றிக் கூறப்பட்ட கதை, இவர்கள் இருவரும் சதாம் ஹுசேனுடன் நிலத்தடியிலுள்ள பதுங்குகுழியொன்றில் மறைந்திருக்கிறார்கள் என்பதாகும்.

அப்படியானதொரு பாதுகாப்பான இடத்தை விட்டு வெளியே வந்து, மோசொலில் இவர்கள் தலைகாட்ட வேண்டி வந்ததற்குப் பல விளக்கங்கள் அல்லது காரணங்கள், உளவு வட்டாரங்களில் கூறப்படுகின்றன.

அவற்றில் கொஞ்சம் நம்பக்கூடிய காரணம் கொஞ்சம் வித்தியாசமானது. வாரிசுப் போட்டிக் குழப்பத்தினால்தான், இவர்கள் நிலத்தடிப் பதுங்குகுழிக்குள் இருந்து வெளியேறவேண்டிவந்தது.

அதனால்தான், உயிரையும் விட வேண்டிவந்தது என்ற காரணம்.

ஈராக் - சதாமின் ஆட்சியில் இருந்தபோது, அதிகாரத்தில் கொடி கட்டிப்பறந்தவர்கள் - இப்போது கொல்லப்பட்ட உதேயும், ஹுசேயும்தான். இவர்களில் ஒருவரைத்தான் சதாம் ஹுசேன் தனக்கு அடுத்தபடி ஜனாதிபதியாக அறிவிப்பார் என்பதுதான்,


சதாமின் மகன்கள் ஒளித்திருந்த வீடு தாக்குதலின் பின்னர்

பரவலாக இருந்து வந்த பேச்சு.

ஆனால், இந்த இருவரையும் தவிர, சதாமுக்கு மூன்றாவதாகவும் ஆண் வாரிசு ஒன்று இருந்தது பலருக்குத் தெரிந்திருக்கவில்லை.

உதேயும், ஹுசேயும் சதாமின் ஒரு மனைவி சயீடாவின் பிள்ளைகள். சதாமுக்கு வேறு ஒரு மனைவியும் உண்டு. அவரின் பெயர் சமீரா சபாஸ்டர். சிரியா நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற குடும்பமொன்றைச் சேர்ந்தவர்.

சதாமைத் திருமணம் செய்து கொண்ட பின்னரும், ஈராக்கில் நிரந்தரமாக வசிக்காமல், சிரியாவில் வசித்தபடி ஈராக்குக்கு அவ்வப்போது வந்துபோய்க்கொண்டிருந்தார். இதனால்தான், சமீராவின் பெயர் கடந்த காலத்தில் பெரிதாக பிரஸ்தாபிக்கப்படவில்லை. இதைச் சதாமின் மற்றைய இரு மகன்களும் விரும்பவுமில்லை.

சமீராவுக்கும் சதாமுக்கும் பிறந்த மகனின் பெயர் அலி ஹுசேன். கடந்த இரண்டு வருடங்களாகச் சமீரா- சிரியா நாட்டிலிருந்து திடீரென மறைந்துபோனார். அவர் பாதுகாப்புக் காரணங்களுக்காக லெபனான் நாட்டின் பெய்ரூட் நகருக்குக் குடிபெயர்ந்தார் என்றும், இதற்கான ஏற்பாடுகளைச் செய்தவர் சதாம் ஹுசேன்தான் என்றும் கூறப்படுகிறது.

இதற்குக் காரணம் - பக்தாத்தில் அதிகாரம் செலுத்திக்கொண்டிருந்த முதல் மனைவியின் மகன்களும், மூன்றாவதாக ஒரு வாரிசு ஒன்று அரங்கிற்குள் நுழைவதை விரும்பவில்லை என்பதே ஒரு இலகுவான ஊகம்.

**வன்கூவரிலிருந்து**
**ரிஷி**

பொதுவாகவே பக்தாத்திலிருந்த சதாமின் மகன்களைப் பற்றிப் பரவியிருந்த விடயம் என்னவென்றால், அவர்கள் தங்களுக்குப் பிடிக்காதவர்களைச் சும்மாவிட்டுவிடமாட்டார்கள். மேலே அல்லாவிடம் அனுப்பி வைத்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள் என்பது. இதனால்கூட, சதாமின் சிரியா நாட்டு மனைவியும் மகனும் சிரியாவிலிருந்து லெபனானுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கலாம்.

(தொடரும்)

# சுகாதார அறிவுரைகளின் மூலமாக மாற்றப்பட வேண்டிய மனப்பாங்குகள்

சுகாதார அறிவுரைகள் ஒரே தொனியில் தெரிவிக்கப்படுவதனால், அது நோய்களால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் தன்மை குறைவானதாக அமையும். ஒவ்வொரு நோயாளியும், தமக்கே உரித்தான மனப்பாங்கு, விழுமியங்களைக் கொண்டிருப்பர். இது அவர்களது கல்வித் தரத்திற்கும், வயது, பால், அனுபவம், கலாசாரம, வாழும் சூழல், நோயின் தன்மை என்பவற்றிலும் தங்கியுள்ளது.

இதனடிப்படையில் நோயாளர்களை நான்கு வகைகளாக வரிசைப் படுத்தலாம். அவையாவன - நோய் வருமுன் காப்பு நடவடிக்கை எடுப்போர், நோய் வந்தபின் காப்பு நடவடிக்கை எடுப்போர், நோய் அறிகுறிகளுக்கு மட்டும் காப்பு நடவடிக்கை எடுப்போர், நோய் வந்தபின்பும் அதற்குரிய தடுப்பு நடவடிக்கைகளை எடுக்கத் தவறுபவர்கள்.

எனவே - சுகாதார அறிவுரைகளைக் கூறும்போது, மேற்கூறிய நான்கு வகையான மக்களின் மனப்பாங்கிற்கேற்ப, அறிவுரைகள் தனித்தனியே அமையவேண்டும். இதுவே பொதுவாக எல்லோராலும் விடப்படும் தவறாகும். பொதுவான சுகாதார அறிவுரைகள், உடற்பயிற்சி, உணவுக் கட்டுப்பாடு, மதுபானம் பாவிக்காமை, புகைப்பிடிக்காமை, உடற்சுத்தம் சார்ந்ததாகும்.

சுகாதார அறிவுரைகள், தொற்று நோய்த் தடுப்பிலும், நாட்பட்ட நோய்களின் தடுப்பிலும், புற்றுநோய்த்தடுப்பிலும், தாய் - சேய் நலன்களிலும், விபத்துக்களைத் தவிர்த்தலிலும், காயங்களுக்கு மருந்து கட்டுவதிலும் இன்றியமையாதது.

தொற்றுநோய்த் தடுப்பில் சுகாதார அறிவுரைகள் பற்றி எடுத்து நோக்குவோமாயின் -

உணவு, நீர் ஆகியவற்றில் பக்றீரியாக்கள் சென்றடைந்து, அதன் காரணமாக மனிதனுக்கு நோயை ஏற்படுத்தும் நெருப்புக்காய்ச்சல், வயிற்றோட்டம், கொலரா போன்ற



நோய்களைக் கட்டுப்படுத்த - மலகூடங்களில் மலங்கழித்தல், உணவு உண்ணமுன்னரும், மலங்கழித்த பின்னரும் கைகளினை நன்கு சவர்க்காரம் கொண்டு கழுவுதல், கொதித்தாறிய நீர்ப் பருகுதல், நன்கு சமைத்த சுத்தமான உணவுகளை உண்ணல், கிணற்றுக்குக் கிரமமான முறையில் குளோரின் இடல் ஆகிய அடிப்படை சுகாதார கொள்கையைப் பின்பற்றுவதன்மூலம் தவிர்த்துக் கொள்ளலாம்.

காற்றால் பரவும் நோய்களுள்- காசநோய், நிமோனியா என்பவை பிரதானமானவையாகும்.

காசநோயானது மைக்கோ பக்ரீறியம் ரியுபக்குளோசில் **(Myco bacterium tuberculosis)** என்னும் பற்றீரியா நுரையீரல் கலங்களை அடைந்து, அதனூடு மனிதனின் குருதியை அடைவதனால் நுரையீரல், சிறுநீரகம், என்பு, குருதி என்பவற்றில் காசநோயை ஏற்படுத்துகின்றது. இதனைக் கட்டுப்படுத்த காசநோயாளியின் சுவாசப் பாதையிலிருந்து வெளியேற்றப்படும் சீதக்கழிவுகளை தொற்றுநீக்கிய பின்னர் அகற்றுதல், தொற்று நோயாளியுடன் நெருங்கிப் பழகுவதைத் தவிர்த்தல், நோயாளியாக மருத்துவர்களால் கணிக்கப்பட்டவர்கள் மருத்துவ ஆலோசனைப்படி பெற்ற மருந்துகளை உட்கொள்வதனால், நோய்க்கிருமிகளை அழிப்பதன்மூலம் கட்டுப்படுத்தலாம். இதனைவிடத் தொடர்ச்சியான இருமல், இரவுக்காய்ச்சல், அதிகளவில் வியர்த்தல், உடல் நிறைகுறைதல் ஆகிய குணங்குறிகளை உடையோர் வைத்திய ஆலோசனையை நாடுதல் சாலச்சிறந்தது.

நியுமோனியா **(Pneumonia)**, ஸ்ரெப்ரோ கொக்கஸ் நியுமோனியா **(Strepto coccus Pneumonia)**, சூடோமோனசு **(pseudomonas)** போன்ற பற்றீரியாக்களினால் ஏற்படுகின்றது. இந்நோயாளி கைக்குட்டையைப் பாவித்து இருமுதல், தொற்று நோயாளியின் சுவாசப் பாதையில் இருந்து வெளியேறும் கழிவுகளை தொற்று நீக்கிய பின்னர் அகற்றுதல் போன்ற ஆரம்ப சுகாதாரக் கொள்கையைப் பின்பற்றுதல் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம். போஷாக்குக் குறைவினாலோ, சலரோகம், சலம் போன்ற நோயினாலோ நீர்ப்பீடனம் குறைந்தோரையும், மதுபானம், புகைப் பிடிப்போரையும், மிக இலகுவாகத் தாக்குவதனால் - அவர்கள் தமக்குச் சாதாரணமாக வரும் இருமல், தடிமலில்கூட கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

### மூட்டுவாதக் காய்ச்சல்
(Rheumatic Fever)

இந்நோய் ஸ்ரெப்ரோ கொக்கஸ் வகை A **(Strepto Coccus Type-A)** என்னும் பற்றீரியாவால் ஏற்படும். தொண்டை அழற்சியைத் தொடர்ந்து ஏற்படும் நீர்ப்பீடன மாற்றம், மூட்டுக்களில் சில மாற்றத்தினை ஏற்படுத்துவதனால் மூட்டுநோயும், மேலும் குருதியில் ஏற்படும் மாற்றமானது இதயவால்வினையும், இதயச்சுவரையும் தாக்குவதனால், **Carditis** இனையும் எற்படுத்துகின்றது.

எனவே, இதனைத் தடுப்பதில் தொண்டை அழற்சியுடையோர் வைத்தியரின் ஆலோசனையைப் பெற்று, **Penicillin** என்னும் மருந்தினை 7-10 நாடகள் உபயோகிக்கலாம். பென்

**சிவசக்தி**
**யாழ். மருத்துவபீடம்**

சிலினுக்கு ஒவ்வாமையானோர் **Erythromycin** என்னும் நுண்ணுயிர்க் கொல்லியை உபயோகிக்கலாம்.

மூட்டுவாதக் காய்ச்சல் உள்ளோர் 2 - 3 மாதம்வரை படுக்கையில் ஒய்வெடுத்தல் வேண்டும். சிறுவயதினர் (16 - 18 வயதினர்)- தமது 21 ஆவது வயதுவரை மாதம் ஒருமுறை **Benzathine Penicillin** என்னும் நுண்ணுயிர்கொல்லி ஊசி மருந்தினை ஏற்றுதல்வேண்டும். 21 வயதிற்குச் சற்றுமுன்னரோ, பின்னரோ நோய் ஏற்பட்டவருக்குக் காய்ச்சல் ஏற்பட்ட நாளிலிருந்து 5 வருடங்களுக்கு **Benzathine Penicillin** ஊசி மருந்து வழங்கப்படுகிறது. இதயப்பாதிப்பு ஏற்பட்டவர்கள், அவர்களின் 21 வயதுவரை மட்டுப்படுத்தாது, அவர்களின் வாழ்நாள் முழுவதும் **Benzathine Penicillin** மருந்து கொடுக்கப்படுகின்றது.

நாட்பட்ட நோய்களில் முக்கியமானது மாரடைப்பு, இரத்த அழுத்தம், நீரிழிவு என்பவை முக்கியமானதாகும். நாட்பட்ட நோயைக் கருத்திற் கொள்ளும்போது, இந்நோயை முற்றாகக் குணப்படுத்தமுடியாது. ஆனால், அதனைக் கட்டுப்படுத்துவதன்மூலம், அதனால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

நீரிழிவு நோயினை உடையவர்கள் - குருதியிலுள்ள குளுக்கோஸையும், சிறுநீரிலுள்ள குளுக்கோஸையும் தாமாகவே சோதித்து, தமது குருதியின் குளுக்கோஸைக் கட்டுப்படுத்தலாம். இதற்கு மாச்சத்துக் குறைந்த, நார்ச்சத்துக் கூடிய உணவுகள் உட்கொள்ளல், இன்சுலின் ஏற்றல், குருதியின் குளுக்கோஸைக் குறைக்கும் மருந்துகளை உட்கொள்ளல் ஆகியவற்றை மேற்கொள்ளலாம். மாரடைப்பு நோயானது - இதயத்திலிருந்து குருதியை வழங்கும் முடியுரு குருதிக்குழாய்களில் கொலஸ்திரோல் போன்ற இரசாயனப் பதார்த்தங்களின் படிவுகளால் ஏற்படுகின்றது.

(தொடரும்)

## பிரிட்டனின் 'டக்கவல்'

# சிறுவர் தடுப்புமுகாமை மூடிவிட எதிர்க்கட்சியினர் கோரிக்கை!




பிரிட்டனுக்குள் சட்டவிரோதமாக நுழைவோர் கைதுசெய்யப்பட்டு, நாடு கடத்தப்படும் வரை தங்கவைப்பதற்காக, லனக்செயரில் அமைக்கப்பட்டுள்ள முகாமை முடிவிடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களை நீண்டகாலத்திற்கு தடுத்துவைப்பதற்காக, பிரத்தியேகமாக இந்த முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

62 படுக்கைகளைக் கொண்ட இந்த முகாமை மூடிவிடுமாறு, பிரிட்டனின் எதிர்க்கட்சி உறுப்பினர்களும், ஸ்கொட்லாந்து நாட்டுத் தேவாலயமும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சிறுவர்களை நீண்டகாலத்திற்குத் தடுப்புமுகாம்களில் வைத்திருப்பதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு, சிறைச்சாலைகளுக்கான தலைமை அதிகாரியான அனா ஓவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

டக்கவல் முகாமில் - சிறுவர்களுக்கான கல்வி, விளையாட்டு வசதிகளும் திருப்திகரமாக அமையவில்லையென்று அவர் கூறினார்.

நாடு கடத்தப்படவிருக்கும் அகதிகளைத் தங்கவைப்பதற்கென, 148 முகாம்கள் பிரிட்டனில், அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



ஈராக்கில், பிரிட்டிஷ் படையினரின் ஆக்கிரமிப்பால் சேதமடைந்த தனது வீட்டைப் பார்வையிடும் பெண்.



இஸ்ரேலையும், மேற்குகரையையும் பிரிக்கும் எல்லையில், பலஸ்தீனப் பெண் ஒருவர், இஸ்ரேலியப் படையினருடன் விவாதித்துக் கொண்டிருப்பதை படத் தில் காணலாம்.

## சீன நிலநடுக்கத்தில் இருவர் உயிரிழப்பு!

சீனாவின் வடபகுதியில் மொங்கோலியா என்னும் இடத்தில், கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற நிலநடுக்கத்தில், இருவர் உயிரிழந்தனர். 43 பேர் காயமடைந்தனர். 2,700 வீடுகள் சேதமடைந்தன

இந்த நிலநடுக்கம் 5.9 ரிச்சர் வரை பதியப்பட்டதாக, புவியியல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பத்துப் பேர் கைது!

இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவில், உல்லாச விடுதியொன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பாக, 10 பேர் வரை கைதுசெய்யப்பட்டனர்.

இந்தோனேஷியாவின் சுதந்திர தினமான நேற்று இந்த விவரம் வெளியிடப்பட்டது.

கடந்த ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி இடம்பெற்ற இந்தக் குண்டு வெடிப்பில், 12 பேர் கொல்லப்பட்டதும், 150 பேர்வரை காயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

# பக்தாத் சிறைச்சாலை மீது தாக்கு; ஆறு ஈராக்கியர்கள் உயிரிழந்தனர்!





பக்தாத்தில், அமெரிக்கப் படையினரால் நிர்வகிக்கப்படுகின்ற சிறைச்சாலை ஒன்றின் மீது நடத்தப்பட்ட மோட்டார் குண்டுத் தாக்குதலில் 6 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர். 59 பேர்வரை காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தாக்தலுக்குள்ளான சிறைச்சாலையில், 500 கைதிகள் அமெரிக்காவால் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். 'அபு களுப்' என அழைக்கப்படும் இந்தச் சிறைச்சாலையில் சதாம் ஹுசைனின் எதிரிகள் சிறை வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, ஈராக்கில் நாச வேலைகளும், வன்முறைகளும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நேற்று இரு தடவைகள் எண்ணெய்க் குழாய்கள் தாக்கப்பட்டுள்ளன. இரண்டு நாட்களுக்கு முன்னரும் துருக்கிக்கான எண்ணெய் விநியோகக் குழாய் தாக்கப்பட்டது. அத்துடன் நீர் விநியோகக் குழாய் ஒன்றும் தாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மிகவும் மோசமான நிலையிலுள்ள ஈராக்கின் பொருளாதாரம், இத்தாக்குதல்களால், தொடர்ந்தும் கீழ்நோக்கித் தள்ளப்படுமென அஞ்சப்படுகிறது.

எண்ணெய்க் குழாய்கள் தாக்கப்படுவதால் - நாள் ஒன்றுக்கு 7 மில்லியன் அமெரிக்க டொலர்களை இழக்கவேண்டியிருப்பதாக, ஈராக்கிய கவர்னர் ஒருவர் தெரிவித்தார்.

இதுஇவ்வாறிருக்க - கடந்த சனிக்கிழமை கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட கூட்டத்தினரை தடுக்கமுற்பட்ட டென்மார்க்கைச் சேர்ந்த படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டார்.

# இடி அமீனின் மரணச்சடங்கில் உறவினர் மாத்திரம் பங்கேற்பு!



(றியாத்)

கடந்த சனிக்கிழமை மரணமடைந்த உகண்டாவின் முன்னாள் சர்வதிகாரி இடிஅமீனின் இறுதிச் சடங்கு, சவுதிஅரேபியாவிலுள்ள ஜெத்தாவின் கடற்கரைப் பகுதியில்- அவரது வீட்டிற்கு அண்மையில் அமைந்துள்ள மயானத்தில் நடைபெற்றது. குடும்ப உறவினர்கள் மாத்திரமே இறுதிச்சடங்கில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

70 வயதுடைய இடிஅமீன் - 8 ஆண்டுகள் உகண்டாவை ஆட்சி செய்தார். இவரது ஆட்சிக் காலத்தில் 4 லட்சம் பேர்வரை கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜேர்மனின் சர்வாதிகாரி ஹிட்லரை இடிஅமீன் அதிகம் நேசித்தார்.

40 ஆயிரம் ஆசிய நாட்டவர்களை பலவந்தமாக உகண்டாவில் இருந்து வெளியேற்றியமை, எதிரிகள் பலரின் தலைகளை தனது குளிர்சாதனப் பெட்டிக்குள் வைத்திருந்தமை போன்றன இடிஅமீனின் ஆட்சிக் காலத்தில் நடந்த கொடுமையான ஆட்சிக்கு சான்றுகள் சிலவாகும்.

அயல்நாடான தன்சானியாவின் படைகளாலும், இடிஅமீனால் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டவர்களாலும் - 1979 ஆண்டு நடத்தப்பட்ட புரட்சியினால் - இடிஅமீன் நாட்டிலிருந்து தலைமறைவானார். பின்னர் இவருக்கு சவுதிஅரேபியா அரசியல் அடைக்கலம் கொடுந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# மேற்குக்கரை பிரதேசத்தில் பலஸ்தீனர் ஒருவர் கைது!

(காஸா)

குவல்குல்யா என்ற இடத்தில் வைத்து பலஸ்தீனப் போராளி ஒருவர் இஸ்ரேல் படையினரால் கைது செய்யப்பட்டார்.

இஸ்ரேல் மீண்டும் பலஸ்தீனியர்களிடம் கையளிக்கத் தீர்மானித்த நான்கு மேற்குகரைப் பிரதேசங்களில் குவல்யாவும் ஒன்றாகும்.

இஸ்லாமிக் பஜிக்காட் அமைப்பைச் சேர்ந்த அசெம் நாசெல் என்ற இஸ்லாமியத் தீவிரவாதியே கைது செய்யப்பட்டவராவார்.

இஸ்ரேல் படையினர் தொடர்ந்து கைதுகளை மேற்கொள்வது சமாதான முயற்சிகளைப் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளதாக, பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

இஸ்ரேலியர்களால் 2002 இல் கைப்பற்றப்பட்ட, பலஸ்தீனர்களுக்குச் சொந்தமான மேற்குக் கரைப் பிரதேசத்தில் அமைந்த நான்கு நகரங்களை மீண்டும் பலஸ்தீனத்திடம் கொடுப்பது தொடர்பாக நேற்று இஸ்ரேல் நாடாளுமன்றத்தில், விவாதிக்கப்பட்டது.

உலகவலம்

# உலகத் தலைவர்கள் மாநாட்டில் தாக்குதல் நடத்துவதற்குத் திட்டம்!

## கம்பாலி தீட்டியிருந்தார் என்கிறார் தாய்லாந்துப் பிரதமர்



(தாய்பேய்)

பாங்கொங்கில் நடைபெறவுள்ள உலகத் தலைவர்களின் மாநாட்டில் குண்டுத் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு - அண்மையில் கைது செய்யப்பட்ட 'ஜெமா இஸ்லாமியா' இயக்கத்தின் அங்கத்தவரான கம்பலி திட்டமிட்டிருந்தார் என, தாய்லாந்துப் பிரதமர் தக்சின் சினவத்திரா தெரிவித்தார்.

கம்பாலி தாய்லாந்தில் இருந்த காலத்தில் - தாக்குதலுக்கான நிதி பரிமாற்றம் செய்யப்பட்டதாகவும் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

பாலிக் குண்டுவெடிப்பு, ஜகர்தாவில் உல்லாச விடுதி மீதான குண்டுத் தாக்குதல் போன்ற தாக்குதல்களிலும் - கம்பாலிக்குத் தொடர்பிருப்பதாக அறியப்பட்டுள்ளது.

கம்பாலி உலகின் ஆபத்துமிக்க பயங்கரவாதி எனவும், சுதந்திரத்தை விரும்பும் அனைவருக்கும் அவர் கைதுசெய்யப்பட்டதன் மூலம் விடுதலை கிடைத்துள்ளதாகவும் அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபரில் ஆசிய பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு நாடுகளின் தலைவர்கள் தாய்லாந்தில் ஒன்று கூடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இந்த மாநாட்டில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் உட்பட 21 நாடுகளின் தலைவர்கள் சமுகமளிப்பதற்கு ஏற்படாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# லைபீரிய கிளர்ச்சிக் குழுக்களுடனான பேச்சு புதிய ஜனாதிபதிக்கு வெற்றியளிக்கவில்லை!

## ஆனாலும் பேச்சுக்கள் தொடருமென அறிவிப்பு



லைபீரியாவின் புதிய ஜனாதிபதி மோசஸ் பிளா - தீவிரவாதக் குழுக்களுடன் கானாவில் கடந்த சனிக்கிழமை நடத்திய பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்காத நிலையில் நாடு திரும்பியுள்ளார்.

இதனால், 14 ஆண்டுகள் நடைபெற்ற போருக்கு முடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கை தகர்ந்துபோயுள்ளது.

இதேவேளை, தற்போது நைஜீரிய சமாதானப் படைகளின் கண்காணிப்பில் லைபீரியா உள்ளபோதும், உணவுப் பற்றாக்குறையை தீர்த்துக்கொள்வதற்கு போதிய உதவிகள் இதுவரை கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய அரசில் - தீவிரவாதிகளுக்கு உயர் பதவிகளைக் வழங்கினால் மாத்திரமே, தமது குழு முற்றாக ஆயுதங்களைக் கைவிடுவதற்கு முன்வருமென, தீவிரவாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதனால், மொன்ரோவியா திரும்பிய ஜனாதிபதி மோசஸ் பிளா - எதுவித கருத்தையும் தெரிவிக்கவில்லை.

எனினும், சமரசப் பேச்சுக்களில் பங்குகொள்ளும் ஏனைய உறுப்பினர்கள் - புதிய ஜனாதிபதி மொசஷ் பிளா, பேச்சுக்களில் பங்குபற்றாவிட்டாலும், கிளர்ச்சியாளர்களுடனான சமாதானப் பேச்சுக்களைத் தொடரவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

லைபீரியாவில் 1990 ஆண்டு தொடக்கம் நடைபெற்ற உள்நாட்டுப் போரில், 2 லட்சம் பேர் மரண்மடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சிறுபான்மையினரை பாதிக்காத வகையில் தேர்தல்முறை அறிமுகப்படுத்த வேண்டும்!

## தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பாதிக்காத வகையிலேயே, புதிய தேர்தல்முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என, தேர்தல் முறையின் மறுசீரமைப்புக்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவரான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

புதிய தேர்தல் முறை தற்போதைய நிலையில் அவசியம் என்றும், இந்தத் தேர்தல்முறை ஊடாக, சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவமும்- சிறிய கட்சிகளின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவமும் பாதிக்கப்படக் கூடாது என்பது, சகல கட்சிகளின் அபிப்பிராயம் எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பாகத் தெரிவுக் குழுவில் விரிவாகக் கலந்துரையாடப்படும் எனவும் குறிப்பிட்டார்.

சிறிய கட்சிகளின் பிரதிநிதித்துவம், பாதிக்கப்படுமென அச்சம் கொள்ளத்தேவையில்லை என்றும், வடக்கு - கிழக்குத் தவிர்ந்த, ஏனைய பிரதேசங்களில் வாழும் சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவமும் பாதிக்காத வகையில் அமைக்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

இதேவேளை - நாடாளுமன்றத் தெரிவுக்குழு, விரைவில் நியமிக்கப்படும் எனவும், இந்தத் தெரிவுக்குழுவில்,ஆளும்கட்சி சார்பில்- பத்து உறுப்பினர்களும், எதிர்க்கட்சி சார்பில்- ஒன்பது உறுப்பினர்களும் இருப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மூதாரில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக கண்காணிப்புக்குழு ஹக்கீமுடன் பேச்சு!



கண்காணிப்புக்குழுவினருடன் பேச்சு நடத்துகிறார் அமைச்சர் ஹக்கீம்

(திருகோணமலை)

மூதூர் சம்பவங்கள் தொடர்பாக, திருகோணமலை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருடன், அமைச்சர் ரவூப் ஹக்கீம் பேச்சுவார்த்தை நடத்தினார்.

திருகோணமலை உட்துறைமுக வீதியிலுள்ள மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தை, சுமார் இரண்டு மணித்தியாலங்களாக இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பில் - மூதூர் பிரதேச முஸ்லிம் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். அத்துடன், திருகோணமலை மாவட்டத் தலைமைப் பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேங்கே, மூதூர் இராணுவப் பொறுப்பதிகாரி பிரிகேடியர் ஷகீர் மற்றும் கடற்படை அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில், மூதூரில் இடம்பெற்ற சம்பவங்களை அமைச்சர் ரவூப் ஹக்கீம் எடுத்துக் கூறினார்.

இதேவேளை-

இந்த விடயங்கள் தொடர்பாக, இன்று விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாட இருப்பதாகவும், அதன் பின்னர், இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று- திருகோணமலை மாவட்டப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைமையதிகாரி தெரிவித்துள்ளார்.

### கொழும்பு...

நேரத்தில், 58 ரோந்து நடவடிக்கைகளும், 191 வீதித் தடைகளும் ஏற்படுத்தப்பட்டதாக, அந்த அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையில் - பொலிஸ் விசேட நடவடிக்கைப் பிரிவினருடன், இராணுவத்தினரும் இணைந்து செயற்பட்டதாகவும், இத்தகைய தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்து கொழும்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்படும் எனவும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ரா,ச)

### 20 அகதிகள்...

முறைப்பாடு பெறப்பட்டதைத் தொடர்ந்து, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரால், இன்று காலை யாழ். மாவட்ட செயலகத்தில் ஒப்படைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

தமிழகத்தில் இருந்து திரும்பிய அகதிகளில் - இரண்டு பேர் யாழ்ப்பாணத்தையும், இருபது பேர் மன்னாரையும் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(113)

## பொற்பதி கிராமத்திற்குச் சென்ற

# பல்கலைக்கழக மாணவர்களை இராணுவம் தடுத்து நிறுத்தியது!

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு பொற்பதி கிராமத்தில் மக்கள் குடியிருப்புக்கு மிக அருகில் புதிதாக அமைக்கப்பட்ட இராணுவ முகாமைப் பார்வையிடச் சென்ற பல்கலைக்கழக மாணவர்கள், நேற்று படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

மேற்படி சம்பவம் பற்றி தெரியவருவதாவது, அப்பகுதிக்குச் சென்ற பல்கலைக்கழக மாணவர்களை தடுத்து நிறுத்திய இராணுவம், பல்கலைக்கழக மாணவர்கள் என்பதனை உறுதிப்படுத்துமாறு கேட்டனர். மாணவர்கள் தமது பல்கலைக்கழக அடையாள அட்டையைக் காணபித்த பின்பும், படையினர் தொடர்ந்து செல்ல அனுமதிக்கவில்லை. அதன் பின்னர் - இராணுவத்தினருக்கும், மாணவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற வாக்குவாதத்தையடுத்து, இராணுவத்தால் வரையறுக்கப்பட்ட சிறுபகுதியைப் பார்வையிடுமாறு கூறினர். அதனை ஏற்கமறுத்த மாணவர்கள், அந்த இடத்திலிருந்து திரும்பி, அந்தக் கிராமமக்களோடு கலந்துரையாடினர்.

புரிந்துணர்வு உடன்பாடு ஏற்பட்ட பின்னரும்கூட, அந்தப் பகுதி மக்களை - இராணுவம் கவசமாகப் பயன்படுத்தும் நோக்குடனேயே, இந்தக் கிராமத்தை சுற்றி இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது என எண்ணவேண்டியுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தப் புதிய இராணுவ முகாமால், மக்கள் தமது அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்திசெய்ய முடியாத நிலையில் உள்ளனர். இதனால், அவர்கள் மனித உரிமை ஆணைக்குழு, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு போன்றவற்றுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

மக்களால் கையளிக்கப்பட்ட அறிவித்தலை - உடனடியாக வாபஸ் பெறுமாறு, அந்தப் பகுதி இராணுவத்தினர் மக்களை அச்சுறுத்துகின்றனர். இதன் எதிரொலியாக- கடந்த வியாழன், வீதியால் சென்ற அந்தப் பகுதி இளைஞர் ஒருவர் இராணுவத்தினரால் கண்மூடித்தனமாக தாக்கப்பட்டார். அத்துடன், கடற்தொழில் செய்வதற்கான பாஸ் நடைமுறையிலும், பாஸ் எடுக்காமல் கடலுக்கு செல்வோர் சுடப்படுவர் எனவும் படையினர் அச்சுறுத்தியுள்ளனர்.

இந்த முகாமைப் பார்வையிடச் சென்ற- போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி - இராணுவம் விரும்பிய இடங்களில் முகாம் அமைக்கலாமெனப் பொதுமக்களுக்குக் கூறியுளளனர்.

எனவே- தமது அடிப்படைப் பிரச்சினைகளோடு, இந்த முகாம் சம்பந்தப்பட்டிருப்பதால் யாராவது தமக்காகக் குரல் கொடுப்பார்களா? என மக்கள் ஆதங்கத்தோடு கேட்கின்றனர் என பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்தனர்.

### அதிகாரிகள்...

யளித்த இடங்களை - பிரதேச செயலாளர் எஸ்.ஸ்ரீனிவாசன், கமநல உத்தியோகத்தர் எஸ்.தவராசா, இராணுவ அதிகாரிகள், விவசாயிகள் ஆகியோர்- எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9 மணிக்கு, அந்தப் பிரதேசத்தை பார்வையிட அழைத்துச் செல்லப்படவுள்ளனர். (25,34)

### நெடுந்தீவு...

தெளிவுபடுத்தவேண்டும். எனவே, அவர்களை நெடுந்தீவில்தான் வைத்திருக்கவேண்டும் எனத் தெரிவித்தனர்.

இதனையடுத்து, படகுகள் மாவிலித்துறைமுகத்தில் கட்டப்பட்டுள்ளதோடு, மீனவர்கள் தொடர்ந்தும் பொலிஸாரின் பாதுகாப்பிலேயே வைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸார் கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் இணைந்து, இன்று காலை இவர்களை ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர்.

### மீனவர்களை தடுத்து...

கிப் பிடிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து, பொலிஸ்மா அதிபர் மீனவர் சங்கப் பிரதிநிதிகளை அழைத்து, இந்த விடயம் தொடர்பாகத் தெரியப்படுத்துமாறு, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு உத்தரவிட்டார்.

இதனையடுத்து, நேற்றையதினம் கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருந்தனர். பொலிஸ்மா அதிபரினால் அனுப்பப்பட்ட கடிதம், மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கு முன்பாக வாசிக்கப்பட்டது.

கடற்பரப்பில் அத்துமீறி - கடற்தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்களை பிடிப்பதற்கோ, அவர்களைத் தடுத்து வைத்திருப்பதற்கோ, மீனவர்களுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை. மீனவர்கள் அத்துமீறிக் கடற்தொழிலில் ஈடுபடுவது தொடர்பாக,இந்தியத் தூதரகத்துடன் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளுடன் பொலிஸ்மா அதிபர் ரி.ஆனந்தராஜா, நேரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோதே, சுமூகமான முடிவு எட்டப்பட்டுள்ளது என்றும், பொலிஸ்மா அதிபரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தாக பொலிஸ் அத்தியட்சகர் மேலும் குறிப்பிட்டார்.




A/L பரீட்சை முடிவுகள் உங்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கிறதா?

இன்னும் உங்கள் காலத்தை வீணாக்காதீர்கள்.....
உங்கள் எதிர்காலம் தொடர்பான கவலையை எம்மிடம் விடுங்கள்...

உங்களை இன்னும் மூன்றே மூன்று வருடத்தில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகம் ஒன்றின் கணனிப்பட்டதாரி ஆக்கிக்காட்டுகின்றோம்

உங்கள் எதிர்காலக் கனவுகளுக்கு நாங்கள் வழிகாட்டி ஊக்கம் அழிக்கக் காத்திருக்கிறோம்.

**நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்.**

**வழிகாட்டல் கருத்தரங்கு**

**ஆகஸ்ட் 23ம், 24ம் திகதிகளில்**

காலை அமர்வு 10.00மணி மாலை அமர்வு 4.00மணி

இடம் - **IIS** பிரதான மண்டபம், யாழ்ப்பாணம்.

**IIS, John Keells Institute** துறைசார் வல்லுனர்களின் வழிநடத்தலினால் நடாத்தப்படும் முற்றிலும் இலவச இக் கருத்தரங்கில் பங்குகொண்டு உங்கள் எதிர்காலத்தை தீர்மானியுங்கள்

இக்கருத்தரங்கில் மாணவர்களுடன் பெற்றோரும் கலந்து கொள்ளமுடியும்.

"**IIS** என்றும் உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி"

**INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )**
**100, Clock Tower Road, Jaffna.**
T.P No: 021-2222831 Email: iis@sltnet.lk


## மரண அறிவித்தல்

## ஸ்ரீபன் செல்வராசா நல்லையா

அல்வாயைச் சேர்ந்த ஸ்ரீபன் செல்வராசா நல்லையா அவர்கள் 16-08-2003 சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமுவேல் நல்லையா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான றாபேட் நவரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், சாந்தாதேவியின் அன்புக் கணவரும், மகிமைச் செல்வன், அருள்ச்செல்வி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும்,மலர் தங்கத்துரை,ரஞ்சி அழகக்கோன், லிடியா சபாரெட்ணம், மணி-ராஜகுணநாயகம், டேவிட் நல்லையா, பிறாங் நல்லையா, ராணி செபரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (18-08-2003) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் அராலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
N.சத்தியமூர்த்தி
(ஆசிரியர்)

*அராலி வடக்கு,*
*வட்டுக்கோட்டை.*

(454)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.08.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.